வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 07.10.2023 சனிக்கிழமை | இதழ் : 301 | பக்கங்கள் : 16




# மு. காவிலிருந்து நசீர் அஹமட் நீக்கப்பட்டமை சரியானதே!

## உயர் நீதிமன்றம் வரலாற்று தீர்ப்பு எம். பி. பதவியையும் இழப்பார்



கொழும்பு, ஒக். 07

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நசீர் அஹமட்டை கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்கியமை சரியானதும் சட்டபூர்வமானது மானது என்று உயர் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பின் மூலம், தற்போது சுற்றாடல் துறை அமைச்சரான நசீர் அஹமட் தனது பாராளுமன்ற உறுப்புரிமையை இழப்பார். அவரின் இடத்துக்கு, கடந்த பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அவருக்கு அடுத்த இடத்தைப் பிடித்த அலி சாஹிர் மௌலானா பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளார்.

2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சிறீலங்கா முஸ் லிம் காங்கிரஸின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில்

11

# புத்திஜீவிகளை வெளியேற அரசாங்கமே தூண்டுகிறது

## எதிர்க்கட்சி தலைவர் சாடல்

கொழும்பு, ஒக். 07

நாட்டின் அனைத்து துறைகளில் இருந்தும் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். ஆனால், இதற்கான காரணத்தை ஆராய்ந்து இதனை கட்டுப்படுத்த அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது. அரசாங்கமே புத்திஜீவிகளை வெளியேற்ற தூண்டிவருவதாக இருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

11



# மக்கள் எதிர்பார்ப்பவரிடம் தலைமையை வழங்க தயார்!

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 07

மக்கள் எதிர்பார்க்கும் தலைவருக்கு தமது அணியின் தலைமைத்துவத்தை வழங்க எதிர்பார்க்கிறேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பு மயூராபதி பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

11

# மயிலத்தமடு மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பு தீவிரமடைகிறது

## 50 பிக்குகள், 400 சிங்களவர்கள் வருகை கால்நடை பண்ணையாளர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஒக்ரோபர் 07

“மயிலத்தமடு - மாதவனை பகுதிக்கு 50 பிக்குகளும் 400இற்கும் மேற்பட்ட பெரும்பான்மை இனத்தவர்களும் வந்துள்ளனர். இவர்கள் எங்கள் மேய்ச்சல் தரையை வேகமாக ஆக்கிரமித்து வருகின்றனர்”, இவ்வாறு அந்தப் பகுதியில் தொடர்ச்சியாக கால்நடை பண்ணைகளை நடத்தி வரும் தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

இதேநேரம், “எங்களுக்கு தீர்வு பெற்றுத்தராதவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குள் நடத்தும் போராட்டத்துக்கும் ஆதரவு வழங்க முன்வராதமை கவலை க்குரியது என்றும் அவர்கள் சாடினர்.

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை பண்ணையாளர்கள் நேற்று சித்தாண்டி சித்திர வேலாயுத சுவாமி ஆலயம்

11

# அரசியல் ஸ்திரதன்மையை பேண உடன் தேர்தலை நடத்துங்கள்!

## மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, ஒக். 07

நாட்டில் அரசியல் ஸ்திரதன்மையை உறுதிப்படுத்தாமல் எந்தப் பிரச்னைக்கும் தீர்வு காண முடியாது . ஆகவே, உடனடியாக தேர்தலை அரசாங்கம் நடத்த வேண்டும். புத்திஜீவிகளின் வெளியேற்றம் பெரும் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும். இந்த

11

# யாழ். வருகிறார் ஜனாதிபதி!

யாழ்ப்பாணம், ஒக். 07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

11

# அடுத்த வாரம் ஹர்த்தால்; 7 தமிழ் கட்சிகள் கூடி முடிவு!

## முஸ்லிம் கட்சிகளும் ஆதரவு

கொழும்பு, ஒக். 07

அடுத்த வாரம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகள் கூடி முடிவெடுத்துள்ளன. அத்துடன், இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளிக்க சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய பிரதான முஸ்லிம் கட்சிகள் இணங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிபதிக்கு அச்சுறுத்தல் - அழுத்தம் ஏற்படுத்தப்பட்டமை, நீதித்துறையிலும் தமிழினத்தின் மீது தொடரும் ஒடுக்குமுறை

11

# பேருந்துமீது மரம் வீழ்ந்ததில் ஐவர் பலி; எழுவர் படுகாயம்!

## கொழும்பில் நேற்று காலை துயரம்

கொழும்பு, ஒக். 25

பயணித்துக் கொண்டிருந்த இ. போ. ச. பேருந்தின் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் ஐந்து பேர் உயிரிழந்தனர். 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று காலை 6.05 மணியளவில் கொழும்பு - கொள்ளுப்பிட்டி - லிபேர்ட்டி சுற்றுவட்டத்துக்கு அண்மையாக

11



# அரச வங்கிகளை விற்க முடிவு?

கொழும்பு, ஒக். 07

அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு பிரிவினரும் மத்திய வங்கி ஆளுநரும் முன்வைக்கும் முரண்பாடான அறிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் தெளிவான அறிக்கையை வெளியிட வேண்டும் என்று இலங்கை வங்கி ஊழியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

விசேட நிறுவனத்துக்கு மாற்றப்படவுள்ள 31 அரச நிறுவனங்களில் அரச வங்கிகள் உள்ளனவா இல்லையா என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆனால், கடந்த 4ஆம் திகதி அரச தொழில் நிறுவன சீர்திருத்த பிரிவு நடத்திய பயிலரங்கில், 31 அரசு நிறுவனங்களில் 6 வங்கிகள் சிறப்பு நிறுவனத்துக்கு மாற்றப்படவுள்ளன

11

# இப்படியும் நடக்கிறது

நமது ஊடக ஜாம்பவான் அன்று காலை தொலைபேசியில் தொடர்புகொண்டு சொன்னார், "இந்த பத்திரிகை ஆசிரியர்களையெல்லாம் வரிசையில் நிற்கவைச்சு சவுக்காலை அடிக்கவேணும்.' என்று.

அவருக்கு ஏன் இந்த கோபம் என்று அறியமுயன்றபோதுதான் சொன்னார், 'இன்று மாபெரும் போராட்டம்... எண்டுதான் எல்லாரும் செய்தி போட்டனாங்கள். போராட்டம் நடந்த பிறகுதான் அது மாபெரும் போராட்டமா என்பதை சொல்ல முடியும். ஆனால், நாங்கள் போராட்டம் நடக்கின்ற அன்றே இன்று மாபெரும் போராட்டம் எண்டுதான் செய்தியைப் போடுறம்' என்றார்.

'அப்படி போட்டால் சனங்களும் திரண்டு வருவார்கள் எண்டு நினைச்சுக்கொண்டுதானே நாம் அப்படி போடுறது' என்றேன்.

'அப்படி என்றால் இந்தப் போராட்டத்துக்காக மக்கள் திரண்டுவருவார்களா? மக்களின் மன நிலை எப்பிடி இருக்கிறது என்பதையெல்லாம் ஓர் ஊடகக்காரராக நம்மால் கண்டறிய முடியவில்லை என்பதுதானே அர்த்தம்' என்றார்.

இந்த சம்பாசணை நடந்தது கடந்த புதனன்று தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஒன்றாக இணைந்து மனித சங்கிலி போராட்டத்தை நடத்திய கடந்த புதன் கிழமை காலை போராட்டம் ஆரம்பித்த மருதனார்மடம் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் வரை தனது வாகனத்தில் பயணித்து நிலைமையை பார்த்த பின்னரே அவர் பேசியிருந்தார்.

நாடு பொருளாதார நெருக்கடியில் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தபோது, எரிபொருளுக்கும் குழந்தைகளுக்கான பால்மாவுக்கும் கியூவில் நின்றபோது, அறகலய என்ற பெயரில் தொடங்கப்பட்ட போராட்டம் மாபெரும் வெற்றி பெற்றதற்கு காரணம் அன்று மக்கள் ஒவ்வொருவரும் அந்த அரசின் மீது சீற்றம் கொண்டிருந்ததுதான். அப்போதிருந்த அரசை வீட்டுக்கு அனுப்பினால் மாத்திரமே தாங்கள் இனி நிம்மதியாக இந்த நாட்டில் வாழலாம் என்று நம்பினார்கள். அதனால்தான் யாரோ பற்றவைத்த அறகலய என்ற நெருப்பு நாடு முழுவதும் பற்றி எரிந்தது. (வடக்கில் எரியவில்லை என்பது வேறு சங்கதி).

ஆனால், அறகலய என்ற போராட்டம் நடந்து ஓய்ந்து சில நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'கியூ யுகத்'துக்கு தீர்வு கண்டுவிட்ட பின்னர், உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. ஒத்திவைக்கப்பட்ட அந்த தேர்தலுக்கு எதிராக ஜே. வி. பி. போராட்டம் அறிவித்தபோது, மற்றுமோர் அறகலய வரும் என்றே பலரும் நம்பினார்கள். ஆனால், அப்படி அது பெரிய போராட்டமாக மாறாததற்கு காரணம், மக்களுக்கு அப்போது அவசியமானது உள்ளூராட்சி தேர்தல் அல்ல என்பதையே வெளிச்சம் போட்டுக் காட்டியது.

தேர்தல் என்பது மக்களின் ஜனநாயக உரிமை என்று எதிர்க்கட்சிகள் எல்லாம் கூக்குரல் இட்டபோதிலும் மக்களுக்கு ஜனநாயக உரிமையை விட வயிற்றுப்பசிதான் முக்கியமானது என்பதை இந்த அரசியல்வாதிகளால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

அதேபோலத்தான், நமது முல்லைத்தீவு நீதிவான் பதவியை இராஜிநாமா செய்த சம்பவம் எமது மக்களை கொதிப்படையச் செய்திருக்கின்றதா? அது தொடர்பாக சட்டத்தரணிகளும் அரசியல் தலைவர்களும் கொதிப்படைந்தது போல தெரிந்தாலும் மக்கள் அதுபற்றி என்ன நினைக்கிறார்கள் என்று புரிந்துகொள்ள- அல்லது தெரிந்துகொள்ள தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்களால் மாத்திரமல்ல ஊடகங்களாலும் முடியவில்லை.

இப்போது சட்டத்தரணிகள் தொடர்ந்து நீதிமன்றங்களை பகிஷ்கரிப்பது பற்றி நண்பர் ஒருவர் பிரஸ்தாபித்தபோது அருகே நின்றுகொண்டிருந்த மூத்த ஊடகவியலாளர் ரவீந்திரன் நிர்மல், குறுக்கிட்டு சொன்னார்:

'அவர்களுக்கு என்ன, நீதிமன்றங்களை பகிஷ்கரித்தாலும், அந்த நாட்களில் நடக்கும் வழக்குகளுக்கான பணத்தை தத்தமது கட்சிக்காரர்களிடம் வாங்குவார்கள் தானே?'.

'அது எப்படி? வழக்கு நடக்காமல் அது வேறு ஒருநாளுக்கு ஒத்திவைக்கப்படும் என்பது சரி. அதற்காக வழக்கு நடக்காமல் ஒத்திவைத்த நாளுக்கு சட்டத்தரணிகள் பணம் கேட்கப்போவதில்லையே' என்றேன்.

அதற்கு நிர்மல் சொன்னார், தான் புதிதாக வாங்கிய காணி ஒன்றில் தற்காலிக கொட்டில் ஒன்றைப் போட்டுக் குடியிருந்தவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்காக யாழ். மாவட்ட நீதிமன்றில் ஒரு பெண் சட்டத்தரணி ஊடாக தாக்கல் செய்திருந்த வழக்கு கடந்த ஐந்து வருடங்களாக நடந்ததாம். கடந்த டிசெம்பர் மாதமே தனக்கு சார்பாக தீர்ப்பு சொல்லப்பட்ட பின்னரும், அதன் பின்னர் செய்யவேண்டிய நிதிமன்ற பணிகளை தனது சட்டத்தரணி செய்து தரவில்லையாம், அதனால் அவரிடமிருந்து 'பைலை' எடுத்து வேறு ஒருவரிடம் கொடுப்பதற்காக கேட்டபோதுதான் அவர் அந்த வழக்கு நடந்த போது திகதியிடப்பட்ட அத்தனை நாட்களுக்கும் (சட்டத்தரணிகள் நீதிமன்றத்தை பகிஷ்கரித்த சில நாட்களும் அதற்குள் அடக்கம்) சேர்த்து அவர் தன்னிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டே 'பைலை' திரும்பத் தந்ததாக கூறினார்.

அப்படி ஒரு பெண் சட்டத்தரணி பெற்றுக்கொண்டார் என்பதற்காக எல்லோரும் வாங்குகின்றார்களோ தெரியவில்லை. ஆனாலும் சட்டத்தரணிகளின் இதுபோன்ற பகிஷ்கரிப்பு இனி மேலாவது நீதிமன்றங்களும் நீதிவான்களும் பாதுகாப்பாகவும் அழுத்தங்கள் இன்றியும் பணியாற்ற உதவினால் நல்லதுதான்.

மேலே சொன்ன மனித சங்கிலி போராட்டம் முடிந்ததும், அதனை ஏற்பாடுசெய்த கட்சித் தலைவர்களின் சந்திப்பு பற்றிய சில தகவல்களும் கிடைத்தன. அந்தச் சந்திப்பு பற்றி பின்னர் பார்ப்போம்.!

**- ஊர்க்குருவி.**

# பாராளுமன்றத்தில் அமைதியின்மை!

கொழும்பு, ஒக். 07

பாராளுமன்றத்தில் நேற்று கடும் அமளிதுமளி ஏற்பட்டதையடுத்து, சபை அமர்வு 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு செலுத்தப்பட்ட வட்டி வீதங்கள் குறித்து சபையில் எழுப்பப்பட்ட கேள்வியைத் தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இது தொடர்பான கேள்வியை பாராளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க எழுப்பியிருந்த நிலையில், அதற்கு பதிலளித்த ஆளும் கட்சி, இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு மேலும் கால அவகாசம் கோரியிருந்தது.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையில் கடும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதை தொடர்ந்தே 10 நிமிடங்கள் சபை ஒத்திவைக்கப்பட்டது. (அ)

# நாட்டில் 30 வீத வாகனங்களால் அதிக கரும் புகை வெளியீடு!

கொழும்பு, ஒக். 07

நாட்டில் 30 வீதமான வாகனங்கள் கறுப்பு புகையை வெளியிடுகின்றன என்று வாகன உமிழ்வு சோதனை நம்பிக்கை நிதியம் தெரிவித்துள்ளது.

வாகனங்கள் வெளியிடும் கரும் புகையில் உள்ள நச்சு வாயுக்கள் புற்றுநோய் மற்றும் சுவாச நோய்களை ஏற்படுத்தக்கூடும் என சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

அதிக கரும் புகையை வெளியிடும் வாகனங்கள் தொடர்பில் வாகன உமிழ்வு பரிசோதனை அறக்கட்டளை நிதியத்தில் மக்கள் முறைப்பாடு செய்ய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் புகார்களை 0703500525 என்ற வட்ஸ்அப் மூலம் தெரிவிக்கலாம்.

வாகன உமிழ்வு சோதனை அறக்கட்டளை நிதியம் ஓர் அறிக்கையை வெளியிட்டு, புகாரில் வாகனம் கரும் புகையை வெளியிடுவதையும் அது பயணிக்கும் இடத்தையும் தெளிவாகக் காட்டும் புகைப்படத்தை கொண்டிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனத்தை அடையாளம் காண ஒழுங்குமுறை பிரிவு விசாரணைகளை நடத்தும், மேலும் அதை சரிசெய்ய ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படும்.

இந்த காலத்துக்குள் வாகனம் பழுது பார்க்கப்படாவிட்டால், அதன் வருவாய் உரிமம் தடுப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் என்றும் நிதியம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# முல்லைத்தீவில் விவசாய கண்காட்சி!

யாழ்ப்பாணம், ஒக். 07

"பாடசாலை தோட்டத்தின் ஊடாக தொழில் முனைவு மற்றும் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தல்" எனும் தொனிப்பொருளில் வடக்கு மாகாண சபையால் உலக உணவு நிறுவனத்தின் அனுசரணையில் விவசாய கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியில் எதிர்வரும் 10, 11ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சியில் கல்வித் திணைக்களம், விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், சுதேச மருத்துவத் திணைக்களம், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம் என்பன இணையவுள்ளன.

இந்தக் கண்காட்சியை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, மீன்பிடி துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தோவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், பாராளுமன்ற உறுப்பினர் கே. காதர் மஸ்தான் வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஆகியோர் ஆரம்பித்து வைக்கவுள்ளனர் என்று வடக்கு மாகாண பிரதம செயலர் எஸ். எம். சமன் பந்துலசேன தெரிவித்துள்ளார். (ஐ)

# கொக்குவிலில் அஞ்சல் ஊழியர்கள் சிரமதானம்!



யாழ்ப்பாணம், ஒக். 07

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு கொக்குவில் அஞ்சல் பணிமனையினரால் கடந்த வியாழக்கிழமை சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

கொக்குவில் குளப்பிட்டி வீதியில் உள்ள கால்வாய் இந்த சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

இந்த சிரமதானப் பணியில் கொக்குவில் அஞ்சல் அதிபர் உத்தியோகத்தர்கள்,உப அஞ்சல் அதிபர்கள், ஊழியர்கள் பங்கேற்றிருந்தனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி, சந்தை என்பன அமைந்துள்ள பகுதியிலிருந்த கால்வாய் தண்ணீர் வழிந்தோட முடியாத நிலை காணப்பட்டது. சிரமதானத்தின் மூலம் இது சீர் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நான்கு மாத குழந்தையை துஷ்பிரயோகம் செய்த தந்தை!

கொழும்பு, ஒக். 07

நான்கு மாத குழந்தையை துஷ்பிரயோகம் செய்த தந்தையை மொனராகலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட குழந்தையின் தாய் முன்வைத்த முறைபாட்டுக்கமைய குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிள்ளைகள் பங்கேற்கும் நிகழ்வு ஒன்றை பார்ப்பதற்காக குழந்தையை தந்தையிடம் ஒப்படைத்து விட்டு தாயார் பாடசாலைக்கு சென்றுள்ளார். அவர் வீட்டுக்கு திரும்பி வந்தபோது குழந்தை துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்ததை அவதானித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
07.10.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பேருந்துக்கு பின்னால் கையசைப்பதால் பயனில்லை

நாடு பொருளாதார நெருக்கடியின் சிவப்பு எச்சரிக்கையை இன்னும் தாண்டவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக சில மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தாலும்கூட, நம்பிக்கைமிக்க சூழலை ஏற்படுத்துவதில் ரணில் அரசாங்கத்தால் அதிகம் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. இலங்கை பொருளாதார நெருக்கடியின் ஆபத்தான கட்டத்தை இன்னும் தாண்டவில்லையென்று நாணய நிதியத்தின் அறிக்கை கூறுகின்றது. எனினும், நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட உதவி விரைவில் கிடைக்குமென்னும் எதிர்பார்ப்பு உண்டு – ஆனால், மூன்றாவது கட்ட உதவி கிடைக்க வேண்டுமாயின் – இலங்கை அதற்கு முன்பதாக பல விடயங்களில் முன்னேற்றங்களை காண்பிக்க வேண்டும்.

இவ்வாறானதொரு சூழலில் அடுத்த ஆண்டு தேர்தலுக்கான ஆண்டாகவும் இருக்கப் போகின்றது. ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்து எவரெல்லாம் களமிறங்கப் போகின்றனர் என்பதில் இதுவரை உறுதியான தகவல்கள் இல்லை. பல முனைப் போட்டிக்கான சூழலே வெளித்தெரிகின்றது. ராஜபக்ஷ சகோதரர்களும் ஏதோவொரு வகையில் ஜனாதிபதி தோர்தலில் தலையீடுகளை செய்வர். மொட்டு – முற்றிலும் மக்களால் நிராகரிக்கப்படவில்லை என்பதை காண்பிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு. இவ்வாறானதொரு நிலையில் தமிழ்த் தேசிய தலைமைகள் என்போர் நிலைமையை எவ்வாறு கையாளப் போகின்றனர் – என்னும் கேள்விக்கான பதிலை தேடும் பணியை இப்போதே முன்னெடுக்க வேண்டும்.

'ஈழநாடு' இது தொடர்பில் முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தியிருக்கின்றது. சூழ்நிலையை கையாளுவதில்தான், அரசியல் வெற்றி தங்கியிருக்கின்றது என்பதை நமது அரசியல் தலைமைகள் என்போர் புரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தமிழர்கள் மேலும் பின்னடைவுகளையே சந்திக்க நேரிடும். 74 வருடங்களுக்கும் மேலான தமிழர் அரசியல் வரலாறு கூறும் அறிவுரை ஒன்றுதான். சூழ்நிலையை கையாளாத போது, தொடர்ந்தும் பின்னடைவுகளையே எதிர்கொள்ள நேரிடும். பேருந்தை தவறவிட்டுவிட்டு, பின்னால் கையசைத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. தமிழ் அரசியல் தலைமைகள் செய்து கொண்டிருப்பது அதுதான். சந்தர்ப்பங்கள் கிடைக்கின்ற போதெல்லாம், அதனை தவறவிட்டுவிட்டு மற்றவர்களை குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதால் எதுவும் நடக்கப் போவதில்லை.

ஜனாதிபதி தேர்தலை தமிழர்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர்? இந்தக் கேள்வி முக்கியமானது. ஜனாதிபதி தேர்தலை கையாளுவது தொடர்பில் தமிழ் தேசிய கட்சிகள் அனைத்தும் கருத்தொருமித்த முடிவுக்கு வரவேண்டும். ஒரு தமிழ் பொதுவேட்பாளர் ஆலோசனையை நாம் முன்வைத்திருந்தோம். அதனை சாதகமாகப் பரிசீலிக்கும் தீர்மானம் ஒன்றை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டிருந்தது. இது தொடர்பில் அனைத்து தமிழ் கட்சிகளும் ஒரு தீர்க்கமான தீர்மானத்துக்கு வரவேண்டும்.

நமது பழைய புரிதல்கள் இனிப் பயன்படாது. அதனை வரலாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் உணர்த்தியிருக்கின்றது. இலங்கை நெருக்கடிக்குள் சிக்குப்பட்டால் அது தமிழர்களுக்கு பயன்படும் – இது ஒரு கணிப்பு. சீனாவின் பிரசன்னம் அதிகரித்தால், அது தமிழர்களுக்கு பயன்படும் – இது இன்னொரு கணிப்பு. பொருளாதார நெருக்கடி தமிழர்களுக்கு வாய்ப்பானது, இதனடிப்படையில் ஏதோவொரு வகையில் கொழும்பு இறங்கிவர வேண்டிய நிர்பந்தம் ஏற்படும் – இது இன்னொரு பார்வை.

ஆனால், இந்தப் பார்வைகள் அனைத்தும் நமது கண்ணுக்கு முன்னாலேயே தோற்றுக் கொண்டிருப்பதை காண்கின்றோம். ஏனெனில், தமிழர் பிரச்னையை முன்வைத்து, எவருமே இலங்கையை நோக்கவில்லை. இதன் காரணமாகத்தான் யுத்தத்துக்கு பின்னரான கடந்த 14 வருடங்களில் தமிழர்களுக்கு சாதகமாக எதுவும் நடைபெறவில்லை. உண்மையில், பொருளாதார நெருக்கடி தமிழர்களின் சனத்தொகையை மேலும் பலவீனமாக்குவதற்கே பயன்பட்டிருக்கின்றது.

இதனை புரிந்துகொண்டுதான், தமிழர் தலைமைகள் செயலாற்ற வேண்டும். வெறும் கற்பனை குதிரை சவாரியில் திருப்திகொள்வதை கைவிட வேண்டும். சூழ்நிலையை கையாண்டு, எடுக்கக் கூடியதை எடுத்து, அவற்றை உச்சளவில் பயன்படுத்திக் கொண்டு முன்னேறும் வழியை அறிதலே தமிழர்களுக்கான அரசியலாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், முன்னரைப் போன்று, பேருந்தை தவறவிட்டுவிட்டு பின்னால் கையசைத்துக் கொண்டிருக்கும் நிலையே தொடரும்.

# சஜித்திடம் நாட்டை ஒப்படைக்க மக்கள் ஒன்றும் மூடர்களல்லர்!

## அமைச்சர் நிமால்



கொழும்பு, ஒக். 07

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்க நாட்டு மக்கள் மூடர்களல்லர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொய்யுரைக்காமல் உண்மையை குறிப்பிட்டு அரச நிர்வாகத்தை முன்னெடுக்கிறார் என கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மூளைசாலிகள் வெளியேற்றம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பொருளாதார பாதிப்பால் மூளைசாலிகள் தற்போது நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மூளைசாலிகள் வெளியேற்றம் இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல என்பதை எதிர்கட்சியினர் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். மூளைசாலிகள் வெளியேற்றத்தை தமது அரசியல் பிரசாரத்துக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாத காரணத்தால் மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்று எதிரணியினர் குறிப்பிடுகிறார்கள். நாட்டில் யார் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியது. அரகலய என்பதொன்றை ஆரம்பித்து நாட்டில் பயங்கரவாத செயல்பாடுகளை தோற்றுவித்தவர்கள்தான் இன்று ஸ்திரமற்ற அரசியல் காரணிகளால் மூளைசாலிகள் வெளியேறுகிறார்கள் என்று குறிப்பிடுகிறார்கள். இது வேடிக்கையாகவுள்ளது.

பொருளாதாரப் பாதிப்புக்கு ஓரிரு இரவில் தீர்வு காண முடியாது. வரியை அதிகரித்தாலும் விமர்சிக்கிறார்கள், குறைத்தாலும் விமர்சிக்கிறார்கள். வரி வருமானத்தை அதிகரிக்காமல் ஒருபோதும் பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண முடியாது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அறியாமல் இருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்க மக்கள் மூடர்களல்லர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நாட்டில் அரசியல் ஸ்திரதன்மையை உறுதிப்படுத்தினார். வங்குரோத்து நிலைக்கு மத்தியில் பிரபலமடையும் வகையில் ஜனாதிபதி செயல்படவில்லை. நாட்டு மக்களுக்கு உண்மையை குறிப்பிட்டு சிறந்த முறையில் செயல்படுகிறார். ஆகவே நாட்டு மக்கள் வெகுவிரைவில் உண்மையை விளங்கிக் கொள்வார்கள் - என்றார்.

# முல்லைத்தீவு இளைஞர்கள் திங்களன்று கண்டன பேரணி!

கொழும்பு, ஒக். 07

நீதிக்கான கண்டன பேரணிக்கு ஒன்றுகூடுமாறு முல்லைத்தீவு இளைஞர்களால் அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இளைஞர்கள் சார்பில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 09 ஆம் திகதி - திங்கட்கிழமை காலை 9 மணியளவில் முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்துக்கு முன்பாக நீதிக்கான கண்டன ஆர்ப்பாட்ட பேரணியானது ஆரம்பமாகி அங்கிருந்து பொதுசந்தை ஊடாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை சென்று அங்கு போராட்டத்தை மேற்கொண்ட பின்னர் மாவட்ட செயலாளர் ஊடாக நிதி அமைச்சின் செயலாளருக்கும் மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

எமது நோக்கமாக முல்லைத்தீவில் திட்டமிட்டு நடத்தப்படும் அத்துமீறல் குடியேற்றம் மற்றும் நீதிபதிக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் , நீதித்துறை அத்தோடு இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் நீதி கேள்வி குறியாகியுள்ளது. நீதியை எதிர்பார்த்து இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டத்துக்கு வடமாகாணத்திலுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அனைத்து பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் , இளைஞர்கள், பொது மக்கள் கட்சி பேதங்களுக்கு அப்பால் பலரும் கலந்து கொள்ள வேண்டும் என்று இளைஞர்கள் சார்பாக கோரிக்கை விடுத்துள்ளோம் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஒக்ரோபர் - 07 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 20
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : நவமி




**மேடம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய் வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்

**இடபம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர் கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர் கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியா மல் அவதிக்கு உள்ளாவீர்கள். இருப்பவர்களுக்கு சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். புது பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் நவீன யுக்திகளை கையா ளுவீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். அனு பவ அறிவால் சாதிக்கும் நாள்.

**கன்னி**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறை வேறும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப் பார்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத் ததை முடிப்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**துலாம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாத படி வேலைச்சுமை வீண் அலைச்சலும் இருக்கும். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவியால் நல்ல செய்தி உண்டு. புது தொழில் தொடங்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மகரம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். தலைமைக்கு நெருக்க மாவீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கும்பம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ப வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள் வீர்கள். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆறுதல் கிடைக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங் குவீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

# கோயில்களை தமிழக அரசு ஆக்கிரமித்தது என்பது தவறு

## பிரதமருக்கு முதல்வர் கண்டனம்

சென்னை, ஒக். 07

**தமிழகத்தில் இந்து கோயில்களை அரசு ஆக்கிரமித்துள்ளதாகக் கூறிய பிரதமரின் குற் றச்சாட்டு தவறானது என முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 'வள்ளலார்-200' ஓராண்டு தொடர் அறநிகழ் வின் நிறைவு விழா சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடைபெற்றது.**

அங்கு பேசிய முதல்வர், வள் ளலாரின் முப்பெரும் விழா நிறைவான விழாவாகும். திமுக அரசு கருணையுள்ள ஆட்சி நடத்தி வருவதால் தான் கருணை வடிவான வள்ளலாரை போற்று கிறோம். அதன் அடையாளமாக கடலூர் மாவட்ட தலைநகரில் 17 ஏக்கரில் அமைக்கப்படவுள்ள புதிய பேருந்து நிலையத்துக்கு 'அருள்பிரகாச வள்ளலார்' எனும் பெயர் சூட்டப்படவுள் ளது.

தமிழகத்தில் உள்ள இந்து கோயில்களை திமுக அரசு கைப் பற்றி, ஆக்கிரமித்துள்ளது. கோயில் சொத்துகள் மற்றும் அதன் வருமானங்களை முறை கேடாக அரசு பயன்படுத்தி வருவதாகவும் பகிரங்கமாக குற் றம்சாட்டியிருக்கிறார். இந்த குற் றச்சாட்டை திட்டவட்டமாக நான் மறுக்கிறேன். இதற்காக பிரதமர் மோடிக்கு வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறுப்புமிக்க இந்திய நாட்டின் பிரதமர் தவறான அவ தூறு செய்தியை சொல்வது சரியானதா? ஒரு மாநிலத்தின் செயல்பாடு குறித்து இன்னொரு மாநிலத்துக்கு சென்று பேசுவ தும் முறையா? தி. மு. க. ஆட் சிக்கு வந்த பிறகுகோயில் சொத் துகளை ஆக்கிரமித்துள்ளது போலவும், வருமானங்களை முறைகேடாக பயன்படுத்துவது போலவும் பொய்யான செய்தி களை இந்திய பிரதமர் ஏன் கட் டமைக்க வேண்டும்.

கடந்த 2 ஆண்டுகளில் தமி ழகத்தில் ரூ.3,500 கோடி மதிப் புள்ள கோயில் நிலங்கள் மீட் கப்பட்டுள்ளது. ஆயிரம் கோயில் களுக்கு குடமுழுக்கு நடத்தியி ருக்கிறோம். ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த வரலாற்று சிறப் புமிக்க 112 திருக்கோயில்களை பழமை மாறாமல் சீரமைக்க ரூ.100 கோடி நிதி ஒதுக்கப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன - என்றும் கூறினார்.

(ஐ)

# அ. தி. மு. கவை எவரும் விமர்சிக்க வேண்டாம்!

## பா. ஜ. கவினருக்கு அண்ணாமலை உத்தரவு

சென்னை, ஒக். 07

அ. தி. மு. கவை பற்றி இனி யாரும் விமர்சனம் செய்ய வேண் டாம் என பா. ஜ. க. நிர்வாகிக ளுக்கு அண்ணாமலை அறிவு றுத்தியுள்ளார்.

பா. ஜ. க. மாநில நிர்வாகி கள் மற்றும் மாவட்ட தலைவர் கள் கூட்டம் சென்னையில் நடந்தது. இதில் பங்கேற்ற தமிழ்நாடு மாநில பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை உரை யாற்றுகையில்,

'கூட்டணி பற்றி எந்த கவ லையும் எனக்கு இல்லை. நீங்க ளும் கவலைப்பட வேண்டாம். கூட்டணியில் இருந்து செல்ப வர்கள் செல்லட்டும். அதை பற்றி நாம் ஏன் பேச வேண்டும்? 3ஆவது முறையாக மோடி மீண் டும் பிரதமராக பதவி ஏற்பதற் காக செயலாற்றுங்கள். மோடி தலைமை வேண்டாம் என்பவர் கள் வெளியேறுகிறார்கள். மோடி வேண்டும் என்பவர்கள் கட்சி யில் இணைகிறார்கள். நாடாளு மன்ற தேர்தலில் வெற்றி பெற ஒவ்வொரு வட்டாரத்தையும் வலிமையானதாக மாற்ற வேண் டும்.

அடுத்த 7 மாதங்களுக்கு யாருக்கும் ஓய்வு கிடையாது. மத்திய அரசு திட்டத்தால் பய னடைந்தவர்களை தொடர்பு கொண்டு, அவர்களை கூட்டத் தில் பேச ஏற்பாடு செய்ய வேண் டும்' - என்றார். அத்துடன், அ. தி. மு. க. கட்சியை பா. ஜ. கவி னர் எவரும் விமர்சிக்கக்கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

(ஐ)

# தமிழ்நாட்டின் அமைதிக்கு ஆளுநர் குந்தகம் செய்கிறார்

## அமைச்சர் துரைமுருகன் குற்றச்சாட்டு

சென்னை, ஒக். 07

ஆளுநர் ஆர். என். ரவி தமி ழகத்தின் சமூகநீதியால் பிறந் துள்ள அமைதிக்கும் குந்தகம் விளைவித்து வருகிறார். இது அவர் வகிக்கும் பதவிக்கு அழ கல்ல" என்று தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

திராவிட மொடல் அரசின் சமூகநீதிக் கொள்கை, பா. ஜ. கவையும், அதன் அமைப்புக ளையும் தமிழ் மண்ணுக்குள் செல்வாக்குப் பெற முடியாமல் தடுத்து வைத்திருக்கிறதே என்ற ஆதங்கம்தான் ஆளுநர் இப்படி பேச காரணமே தவிர, பட்டிய லின - பழங்குடியின மக்கள் மீது அவருக்கு இருக்கும் அக் கறை இல்லை.

அப்படி அவருக்கு உண்மை யிலேயே அக்கறை இருந்திருந் தால் "அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்" என்று சட் டம் பிறப்பித்துள்ளதை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரை சென்றுள் ளவர்களை கடிந்து கொண்டி ருக்கலாம். அடிக்கடி டில்லி செல்லும் அவர், உத்தர பிரதே சத்தில் பட்டியலின மக்களுக்கு எதிரான குற்றங்கள் 31.8 விழுக் காடும், மத்திய பிரதேசத்தில் 63.6 விழுக்காடும் உயர்ந்திருப் பதற்குக் கவலைப்பட்டு குரல் கொடுத்திருக்கலாம். உத்தரப்பி ரதேசத்தில் 13,146, மத்தியப் பிரதேசத்தில் 7214, குஜராத்தில் 1201 எனப் பட்டியலினத்தவர் கொலை செய்யப்பட்டது குறித்து வெகுண்டெழுந்திருக்க லாம். ஏன் பழங்குடியினருக்கு எதிராக மத்திய பிரதேசத்தில் 17 விழுக்காடு அளவுக்குக் குற் றங்கள் அதிகரித்திருப்பதைக் கண்டு பதற்றப்பட்டு பேசியி ருக்கலாம்.

பா. ஜ. க. ஆளும் மாநிலங் களில் அதிகரித்து வரும் இத்த கைய கொடுமைகளை எதிர்த்து உள்துறை அமைச்சரிடம் குரல் கொடுக்காத ஆளுநர், உயர்நீதி மன்ற உத்தரவில் உள்ள ஒரு ஊராட்சியை மட்டும் பற்றிப் பேசுவதன் உள்நோக்கம் என்ன? யாரை ஏமாற்ற இந்த நாடகமா டுகிறீர்கள்? என்றும் கேட்டார்.

(ஐ)

# முல்லைத்தீவு சட்டத்தரணிகளின் பணிப்புறக்கணிப்பு தொடர்கிறது

## நீதிபதி பதவி விலகலுக்கு நீதி வழங்கக் கோரி

முல்லைத்தீவு, ஒக். 07

**முல்லைத்தீவு நீதிபதி ரீ.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் கடந்த 02 ஆம் திகதி ஆரம்பித்த காலவரையறையின்றிய தொடர் நீதிமன்ற புறக்கணிப்பு நடவடிக்கைகள் நேற்றும் ஐந்தாவது நாளாக தொடர்ந்தது.**



நீதித்துறைக்கான சுதந்திரமும், சுயாதீன தன்மைகளும் உறுதி செய்யப்படும் வரை பணி புறக்கணிப்பில் ஈடுபடுவோம் என முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம் மேற்கொண்டதாக முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் த. பரஞ்சோதி தெரிவித்திருந்தார்.

அதற்கமைய கடந்த 02 ஆம் திகதி ஆரம்பித்த காலவரையறையின்றிய தொடர் நீதிமன்ற புறக்கணிப்பு நடவடிக்கைகள் நேற்று ஐந்தாவது நாளாக தொடர்ந்து இடம்பெற்றது.

முல்லைத்தீவு நீதிமன்ற நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருக்கும் அதேவேளை, திங்கட்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் நடைபெறுகின்ற மாங்குளம் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கும் சட்டத்தரணிகளின் யாரும் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# கிளிநொச்சியில் வீட்டுக்கு தீ வைப்பு



கிளிநொச்சி, ஒக். 07

கிளிநொச்சி கல்மடுநகர் இராமநாதபுரம் பகுதியில் வீடு ஒன்றின் மீது நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வீட்டுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்மடு நகர் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 30 ஏக்கர் சந்திப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது குறித்த சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து குறித்த வீட்டுக்கு தீ மூட்டப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் அறிய முடிகின்றது.

இதேவேளை, கிளிநொச்சி அக்கராயன் குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் எரியூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சீரற்ற காலநிலை காரணமாக நாட்டில் 55 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு

## பல குடும்பங்கள் இடம்பெயர்வு

கொழும்பு, ஒக். 07

மாத்தறை உட்பட நாட்டில் 12 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 13 ஆயிரத்து 627 குடும்பங்களைச் சேர்ந்த 55 ஆயிரத்து 780 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம், மண் சரிவால் காற்றால் நான்கு வீடுகள் முழுமையாகவும், 702 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் காயமடைந்துள்ளனர்.

352 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 473 பேர் 15 பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலையால் கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 45 ஆயிரத்து 138 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்து மாத்தறை மாவட்டம், சீரற்ற காலநிலையால் நேற்றும், நேற்று முன் தினமும் அம்மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. (அ)

# பொலிஸ் அதிகாரிக்கு 3 மாதங்களுக்குள் ரூ.ஒரு மில்லியன் நட்டஈடு வழங்க உத்தரவு!

கொழும்பு, ஒக். 07

முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்கு எதிராக பொய் சாட்சியங்களை முன்வைத்த குற்றச்சாட்டின் பேரில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் சுகத் மெண்டிஸைக் கைது செய்து பணி இடைநிறுத்தம் செய்ததன் மூலம் அவரின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அந்த அடிப்படை உரிமைகளை மீறியதற்காக மூன்று மாதங்களுக்குள் மனுதாரருக்கு அரசாங்கம் ஒரு மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கவேண்டும் எனவும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரருக்கு சட்டப்படி வழங்கவேண்டிய சம்பள உயர்வு, படிகள், பதவி உயர்வுகள் அனைத்தையும் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் நீதிபதி பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.துரைராஜா இந்தத் தீர்மானத்தை அறிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் கருப்பொருளின் படி பொலிஸ் திணைக்களம் செயற்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ள உயர் நீதிமன்ற நீதியரசர் துரைராஜா, இந்த சம்பவத்தில் பிரதிவாதிகள் நடந்துகொண்ட விதம் மிகவும் குறைபாடுடையது என சுட்டிக்காட்டினார்.

அரசு அதிகாரிகளும், அரசு ஊழியர்களும் சுதந்திரமாக பணியாற்றுவதற்குத் தேவையான பின்னணியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய நீதியரசர் துரைராஜா, பொலிஸ்துறையும் அவ்வாறே செயல்பட வேண்டும் என்றார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவொன்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மலேசியாவில் 3 இலங்கையர் கொலை: பணப் பிரச்னையே முக்கிய காரணம்!

கோலாலம்ப்பூர், ஒக். 07

மலேசியாவின் கோலாலம்பூரில் வாடகை வீட்டில் மூன்று இலங்கையர்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில் பணப் பிரச்னை இருப்பதாக நம்பப்படுகிறது.

இந்த வழக்குக்கு தீர்க்கப்பட்டுவிட்டதாகவும் நான்கு சந்தேக நபர்கள் மீது கொலைக் குற்றம் சாட்டவும் காவல்துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் நகர காவல்துறைத் தலைவர் டத்தோ அலாவுதீன் அப்துல் மஜித் தெரிவித்தார்.

நான்கு சந்தேக நபர்களில் உயிரிழந்த ஒருவரின் பெற்றோரும், மேலும் இந்த வழக்கில் முக்கிய சந்தேக நபர்களான இரண்டு இலங்கையர்களும் அடங்குவர். பணப் பிரச்னை மற்றும் கடன்கள்தான் கொலைக்கான காரணம் என்று நாங்கள் நம்புகிறோம் என்று அவர் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் கூறினார்.

செப்ரெம்பர் 22 ஆம் திகதி இரவு 11 மணியளவில், கம்போங் கோவில் ஹிலிரில் உள்ள ஜாலான் பெர்ஹெண்டியனில் உள்ள ஒரு வீட்டின் அறையில் மூன்று இறந்த ஆண்களின் சடலங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததை பொலிஸார் கண்டனர். அவர்களின் தலைகள் பிளாஸ்ரிக் பைகளால் மூடப்பட்ட நிலையில் கை, கால்கள் கட்டப்பட்டிருந்தன.

அந்த வீட்டை வாடகைக்கு பெற்றிருந்த தம்பதியின் மகன் மற்றும் அங்கு வாடகைக்கு குடியிருந்த இருவரே சடலங்களாக மீட்கப்பட்டிருந்தனர்.

சம்பவத்தை தொடர்ந்து தலைமறைவான இரண்டு இலங்கையர்களும் செப்ரெம்பர் 25 பொலிசில் சரணடைந்தனர். அவர்களுடன், செப்ரெம்பர் 22 சம்பவத்தன்று கைது செய்யப்பட்ட இலங்கை தம்பதியினரே கொலைக்குற்றச்சாட்டை எதிர்கொள்கின்றனர்.

கைதான இலங்கை தம்பதியில், கணவர் பொலிஸாரின் விசாரணையில் உயிரிழந்துவிட்டார்.

இதேவேளை, தப்பியோடிய 2 இலங்கையர்களும் தலைமறைவாக இருக்க உதவிய மூன்று இலங்கை ஆண்கள் மற்றும் ஒரு பாகிஸ்தானியர் பெட்டாலிங் ஜெயாவில் உள்ள ஒரு மாடி வீட்டில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இலங்கை தம்பதியினரின் தடுப்புக்காவல் செப்ரெம்பர் 29 ஆம் திகதி முடிவடைந்த பின்னர் ஒக்ரோபர் 5 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டது. இருப்பினும், கடந்த சனிக்கிழமை காவலில் இருந்தபோது கணவர் இறந்துவிட்டார்.

இதனால் மொத்தம் ஏழு சந்தேக நபர்கள் இன்னும் விளக்கமறியலில் உள்ளனர் என்று அலாவுதீன் தெரிவித்தார். மூன்று இலங்கையர்கள் மற்றும் பாகிஸ்தானியர் ஆகியோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் இரண்டு பிரதான சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார். (அ)



# வடமராட்சி கரையோரத்தினூடாக தொடரும் உலக சாதனை பயணம்!

வடமராட்சி, ஒக். 07

உலக சாதனை படைக்கும் நோக்கில் கரையோரத்தின் ஊடாக இலங்கையை சுற்றி பயணித்து வரும் சாதனை வீரர் நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை கடற்கரையை வந்தடைந்து வடமராட்சி கரையோரத்தினூடாக பயணித்தை தொடர்ந்துள்ளார்.

சமன் உடுகம சூரி (வயது-52) என்பவர் கடந்த செப்ரெம்பர் 08 ஆம் திகதி கொழும்பு துறைமுக நகரில் இருந்து சாதனை நடைபயணத்தை ஆரம்பித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகரில் இருந்து ஆரம்பித்து அங்கேயே நிறைவு செய்யும் வகையில் திட்டமிட்டுள்ள நிலையில் நேற்று வடமராட்சியை வந்தடைந்தார்.

தொடர்ந்து வடமராட்சி கரையோரங்களினூடாக யாழ்ப்பாணம் கரையோரத்தை அடைந்து இலங்கையின் மேற்கு கரைவழியே கொழும்பு துறைமுக நகரை சென்றடைந்து நிறைவு செய்ய உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-02)

# நீதிபதி சரவணராஜா பதவி விலகலுக்கு தொல்பொருள் திணைக்களமே காரணம்!

## முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஒக். 07

**முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா பதவி விலகியமைக்கு தொல்பொருள் திணைக்களமே முக்கிய காரணமென முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.**

நீதிபதி சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த காலவரையறையற்ற தொடர் நீதிமன்ற புறக்கணிப்பு நடவடிக்கைகள் ஐந்தாவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

இந்தநிலையில், முல்லைத்தீவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட அந்த சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி த.பரஞ்சோதி இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

நீதிபதியால் வழங்கப்பட்ட கட்டளைகள் மற்றும் தீர்ப்புக்களுக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கும் மீளாய்வுகள் விண்ணப்பங்கள் செய்வதற்கும் போதிய சட்ட ஏற்பாடுகள் உள்ளன.

எனினும், அந்த உத்தரவை மீறி கட்டளைகளையோ தீர்ப்புக்களை மாற்றுமாறு அந்தந்த நீதிபதிகளை வற்புறுத்துவதும் அவர்களுக்கு அழுத்தங்கள் பிரயோகிப்பதும் அவர்களின் சுயாதீனமான தன்மைக்கு இடையூறாகும்.

இத்தகைய செயற்பாடுகள் ஏற்படுமாயின் நேர்மையான நீதியினை வழங்கமுடியாத சூழ்நிலைகள் ஏற்படுமென அவர் கூறினார்.

(அ)

# சிறைச்சாலைக் கூடத்தில் தூக்கிட்டு கைதி மரணம்!

கொழும்பு, ஒக். 07

புத்தளம் நீதிமன்ற மூன்றாவது சிறைச்சாலைக் கூடத்தில் தூக்கிட்டு கைதி ஒருவர் உயிர் மாய்த்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 9.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் நுரைச்சோலைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் திருட்டில் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு நீதிமன்றம் வழக்குக்கு கொண்டுவரப்பட்டு புத்தளம் நீதிமன்ற சிறைச்சாலைக் கூடத்தில் அடைத்து வைக்கப்பட்ட பின்னர் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த நபர் கப்புஹேன கனேமுல்ல பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய சமிந்த திஸாநாயக்க என்பவரென பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவ இடத்திற்கு புத்தளம் நீதவான் நீதிமன்ற நீதிபதி எம். சி ஹதுருசிங்ஹ சடலத்தை நேரில் பார்வையிட்ட பின்னர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல உத்தரவிட்டார்.

குறித்த சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக விஜித ஹேரத் மனுத் தாக்கல்!

கொழும்பு, ஒக். 07

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது எனத் தெரிவித்து, குறித்த சட்டமூலத்தை விசேட பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றுமாறு உத்தரவிடக் கோரி, தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தினால் உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி சுனில் வதகல தாக்கல் செய்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த சட்டமூலத்தின் மூலம் பயங்கரவாதம் சரியாக விளக்கப்படவில்லை. இந்த சட்டமூலத்தின் மூன்றாவது பிரிவு தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக கருத்துக்களை வெளியிடும் நபர்களை கூட கைது செய்ய வகை செய்துள்ளது. இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சுதந்திரத்தை இழக்கும் வகையிலும், அதன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலும் இந்த சட்டமூலம் அமையும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் அரசியல் சாசனத்திற்கு முரணானது என அறிவிக்கவும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதல் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் சட்டமூலத்தை நிறைவேற்ற உத்தரவிடவேண்டும் என்றும் மனுதாரர் தனது மனுவில் கோரியுள்ளார்.

(அ)

# இலங்கை மீனவருக்கு சீனாவால் மண்ணெண்ணெய் விநியோகம்!

கொழும்பு, ஒக். 07

சீனாவினால் இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு உதவி அடிப்படையில் வழங்கப்பட்ட மண்ணெண்ணெயை விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த திட்டம் கடந்த 02ஆம் திகதி முதல் நாடெங்கும் அமுல்படுத்தப்பட்டு வருவதாக கடற்றொழில் ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், 15 கடற்றொழில் மாவட்டங்களில் பதிவு செய்யப் பட்ட, கடற்றொழிலில் ஈடுபடும் 29 ஆயிரத்து 57 மீன்பிடி படகுகளுக்கு இவ்வாறு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அதன்படி, முதல் கட்டத்தில் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, தங்காலை, கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு ஆகிய 15 கடற்றொழில் மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள 15 கடற்றொழில் மாவட்டங்களிலுள்ள 97 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ)

# அதிகாலை பஸ் விபத்து; 22 பயணிகளுக்கு காயம்!

கொழும்பு, ஒக். 07

நேற்று அதிகாலை 5 மணி அளவில் தனியார் பயணிகள் பஸ் ஒன்றுடன் கொள்கலன் மோதி விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நிட்டம்புவ, கஜூகம பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில், 22 பேர் காயமடைந்து வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறையில் இருந்து பயணித்த பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 22 பேர் வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# கிராமிய பிரதேசங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் மக்களுக்கு விதை, சந்தை வாய்ப்பு!

கொழும்பு, ஒக். 07

கிராமியப் பகுதிகளில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு, தானிய வகைகளைப் பயிரிடுவதற்கு அவசியமான விதைகளை வழங்குவதுடன் அவற்றுக்கான சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

தானிய இறக்குமதிக்காக அரசாங்கம் செலவழிக்கும் அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் நோக்கத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிராமிய பிரதேசங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு குறிப்பாக உழுந்து, பயறு ஆகிய தானிய வகைகளை பயிரிடுவதற்கு அவசியமான விதைகளை வழங்குவதுடன் அவற்றுக்கான சந்தை வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

இதன் மூலம் மன்னார் மாவட்டத்தில் சுமார் 950 மெட்ரிக் டன் பயறு விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.

இதனால் பயறு இறக்குமதிக்கு செலவிடும் அந்நியச் செலாவணியை சேமிக்க முடிந்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை நாட்டில் பரவலாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், ஆடு வளர்ப்புக்கு அவசியமான உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

முக்கியமாக காப்புறுதி வேலைத்திட்டத்துடன் இணைந்த வகையில் ஆடுகளை வழங்கி வைப்பதனால் ஆடு வளர்ப்பின் போது ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும் முடிந்துள்ளது.

சிறிய அளவில் கிராமிய மட்டத்தில் ஆடுகள் வளர்ப்பவர்களை சுமார் 3 அல்லது 4 ஆண்டுகளில் ஆட்டுப் பண்ணையாளர்களாக மாற்றுவதற்கு அவசியமான வேலைத்திட்டங்களை இதன் மூலம் முன்னெடுக்க முடியும்-என்றார். (அ)

# அனுராதபுரத்தில் மீன்கள் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 07

அனுராதபுரம் கும்பிச்சங்குளம் ஏரியில் ஆயிரக்கணக்கான மீன்கள் உயிரிழந்துள்ளமை தொடர்பில் நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அனுராதபுரம் மாநகர சபை இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

ஏரியில் உள்ள தெப்பிலி பவளப்பாறை, திலாப்பியா மீன்கள், இறால், போன்றவை இவ்வாறு உயிரிழந்து காணப்பட்டன.

இதற்கிடையில், சிலர் தண்ணீரில் மிதக்கும் மீன்களை பிடித்து உண்பதற்கு கொண்டு செல்வது தெரியவந்துள்ளது.

இதேவேளை, உயிரிழந்து காணப்படும் மீன்களை சிலர் அநுராதபுரம் நகரின் சில ஏரிகள் மற்றும் மல்வத்துஓயாவில் விடுவதால், அந்தந்த நீர்த்தேக்கங்களில் உள்ள மீன்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அநுராதபுர மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அநுராதபுரம் மாநகர ஆணையாளர் ருவன் விஜேசிங்க,

கும்பிச்சாங்குளம் ஏரியில் பாசிகள் வளர்ந்து மீன்கள் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு வடமத்திய மாகாண நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது." என கூறினார்.

இதேவேளை, மீன்களின் உயிரிழப்புக்கான காரணத்தை ஆராய்வதற்காக, கும்பிச்சாங்குளம் ஏரியின் சில நீர் மாதிரிகள் அனுராதபுரம் மாநகர சபையின் சுகாதார பிரிவினரால் எடுக்கப்பட்டு பரிசோதனைக்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் ருவன் விஜேசிங்க குறிப்பிட்டார்.

(அ)

# அமெரிக்காவுக்கு சென்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள்



கொழும்பு, ஒக். 07

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடந்த வாரம் அமெரிக்கா புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

ஜனநாயகம் மற்றும் தேர்தல் தொடர்பான ஆய்வுக்காக அவர்கள் அமெரிக்கா சென்றுள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், எஸ்.எம்.தௌபிக், காவிந்த ஜயவர்தன, தலதா அத்துக்கோரள, மருத்துவர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே உள்ளிட்டோர் அமெரிக்கா சென்றுள்ளனர்.

(அ)

# சஜித் மாற்றத்தை விரும்பாத பாரம்பரிய அரசியல்வாதி!

**கூறுகிறார் சரத் பொன்சேகா**

கொழும்பு, ஒக். 07

**சஜித் பிரேமதாச என்பவர் மாற்றத்தை விரும்பாத பாரம்பரிய அரசியல்வாதி எனவும் அவரிடம் இருந்து நாட்டு மாற்றமான ஒன்றை எதிர்பார்க்க முடியாது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

**சமூக வலைத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனை கூறியுள்ளார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

ஐக்கிய மக்கள் சக்தி நான் நம்பும் அரசியல் நிரோட்டத்தில் பயணிப்பதில்லை.

அவர்கள் காலம் கடந்து போன மக்கள் நிராகரித்துள்ள பராம்பரிய அரசியல் முறையில் பயணிக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சில பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி செல்லும் தவறான பாதையை அறிந்தும் கருத்து வெளியிட முடியாது அச்சத்தில் இருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி பாரம்பரிய அரசியல் பயணத்தில் இருந்து விடுப்பட வேண்டும். நாட்டில் மாற்று அரசியலை



ஏற்படுத்த வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் எமது கட்சியை போன்றே பாரம்பரிய அரசியல் விடயங்களையே பேசுகிறார். வேறு எந்த மாற்றங்களும் இல்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் என்னை வேட்பாளராக நிறுத்தினால், கட்சியை நாட்டையும் வெற்றி பெற செய்து காட்ட தயாராக இருக்கின்றேன்.

நடைமுறையில் உள்ள அரசியல் முறையை புரட்டி போட்டு விட்டு அழகான சர்வாதிகார ஆட்சியாளராக மாற தயாராக இருக்கின்றேன்.

சர்வாதிகாரி என்றால் ஹிட்லரை போன்ற சர்வாதிகாரி அல்ல. ஊழலுக்கு எதிரான ஜனநாயக ரீதியிலான சர்வாதிகாரியாக மாற தயார்-என்றார்.

(அ)



# வெள்ளத்தில் மூழ்கியது அதிவேக நெடுஞ்சாலை

கொழும்பு, ஒக். 07

தெற்கு அதிவேக வீதியின் கொக்மாதுவ நுழைவாயில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதனால் இலகுரக வாகனங்கள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலவும் மழையுடனான கால நிலையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை, பொலன்னறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

(அ)

# ஆசிரியர் தினத்தில் கேக் சாப்பிட்ட மாணவர்கள் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஒக். 07

ஊராபொல மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் தினத்தை கொண்டாடுவதற்காக பாடசாலைக்கு கொண்டு வரப்பட்ட கேக்கை சாப்பிட்டதால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக ஒன்பது மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கல்லூரியில் 07ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த மாணவர்கள் குழு நேற்று நண்பகல் 12.00 மணியளவில் வட்டுபிட்டிவல அடிப்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய ஆசிரியர் தினத்தை முன்னிட்டு பாடசாலைக்கு கொண்டுவரப்பட்ட கேக் ஒன்று ஆசிரியர்களுக்கு பரிமாறப்பட்டதாகவும், பின்னர் அதனை சிறுவர்கள் குழுவொன்றும் உண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு இந்த மாணவர்கள் ஒவ்வாமை ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த கேக்குகளை ஊராபொல பிரதேசத்தில் உள்ள கடையொன்றில் இருந்து பாடசாலை மாணவிகள் கொள்வனவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

(அ)

# 2024 பட்ஜெட் சவால்மிக்கது

**ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய**

கொழும்பு, ஒக். 07

அரசாங்கம் இம்முறை தாக்கல் செய்யும் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டம் சவாலுடன் கூடிய வரவு செலவுத்திட்டமாக இருக்கும் என நிதி ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் மக்கள் படும் கஷ்டங்களை அடையாளம் கண்டுள்ளது. அத்துடன் இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் எதிர்நோக்கும் சவாலையும்



புரிந்துகொள்ளவேண்டும்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை தயாரிக்கும்போது முன்வைக்கப்பட்ட யோசனைகள் சம்பந்தமாக வரவு-செலவுத்திட்ட அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளதன் காரணமாக யோசனைகள் தொடர்பில் அரசாங்கம் சட்ட ரீதியாக கவனத்தை செலுத்த நேரிட்டது-என்றார்.

இலங்கை அரசாங்கத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டமானது, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள், யோசனைகளை உள்ளடக்கிய வரவு-செலவுத்திட்டமாக இருக்கும் என கூறப்படுகிறது.

இதனால், வரி விதிப்புகள் உட்பட அரசின் வருமானத்தை பெருக்கக்கூடிய பல்வேறு யோசனைகள் வரவு-செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்படலாம் என பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(அ)

# கொழும்பில் குண்டு தாக்குதல் நடத்தப்படும் என்ற தகவலை உறுதிப்படுத்தும் சாட்சியங்கள் இல்லை

**பயங்கரவாத விசாரணைப் பிரிவு அறிவிப்பு**

கொழும்பு, ஒக். 07

கொழும்பில் உள்ள முக்கிய இடங்களில் எதிர்வரும் சில நாட்களில் தொடர் குண்டு தாக்குதல் நடத்தப்பட உள்ளதாக கிடைத்துள்ள தகவலை உறுதிப்படுத்தக்கூடிய சாட்சியங்கள் முன்வைக்கப்படவில்லை என பயங்கரவாத விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேகரவிடம் அறிவித்துள்ளனர்.

சிறைச்சாலை கைதி ஒருவர், சிறைச்சாலை பஸ்ஸில் இருந்து வெளியில் வீசிய துண்டு காகிதம் ஒன்றில் இது தொடர்பான தகவல் கிடைத்ததாக கூறி பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

இதனை ஆராய்ந்த நீதிமன்றம், தகவல் தொடர்பில் முறையான விசாரணைகளை நடத்தி உடனடியாக அறிக்கையை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டிருந்தது.

இதற்கு அமைய விசாரணைகளை நடத்திய பயங்கரவாத விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் நேற்று நீதிமன்றத்தில் அறிக்கையை தாக்கல் செய்திருந்தனர்.

இதனையடுத்து கொழும்பில் உள்ள முக்கிய இடங்களில் தொடர் குண்டு தாக்குதல் நடத்தப்பட உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது எனக்கூறி தாக்கல் செய்த அறிக்கையை திரும்ப பெறுவதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவு அறிவித்து.

இதனை ஏற்றுக்கொண்ட நீதவான் அறிக்கையை திரும்ப பெற அனுமதி வழங்கினார்.

(அ)

# விபத்தில் காயமடைந்த பொலிஸ் அலுவலர் பலி

கொழும்பு, ஒக். 07

கொழும்பு குருந்துவத்தை சுற்று வட்டத்திற்கு அருகில் நேற்று முன் தினம் மாலை இடம் பெற்ற விபத்தில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

நேற்று முன் தினம் மாலை இந்த பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் ஈடுபட்டிருந்த போது, அதிவேகமாக வந்த சொகுசுக்கார் மோதி விபத்துக்குள்ளானார்.

குருந்துவத்தை பொலிஸ் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றிய வலஸ்முல்ல பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் மனோஜ் பிரியங்கர என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் காரை ஓட்டி வந்த தனியார் நிறுவனம் ஒன்றில் பொறியியலாளராக பணிபுரியும் நாரஹேன்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் வைத்தியசாலை மருத்துவரான ஒருவரின் மகன் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ)

# நிந்தவூரில் மோ.சைக்கிள் திருட்டு; சந்தேக நபர்கள் நான்கு பேர் கைது

## திருடப்பட்ட சைக்கிள்களும் மீட்பு

அம்பாறை, ஒக். 07

**அம்பாறை மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் திருடப்பட்ட நான்கு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக நிந்தவூர் பொலிஸார் தெரிவித்தனர்.**

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக் காலமாக மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவங்கள் அதிகரித்து வந்தன. இந்த நிலையில் நிந்தவூர் பிரதேசத்தில் இருந்தும் ஒரு மோட்டார் சைக்கிள் இனந்தெரியாத நபர்களால் திருடிச் செல்லப்பட்டு இருந்தது .

இதனை அடுத்து நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம்.நஜீம் தலைமையிலான குழுவினர் இது குறித்து புலன் விசாரணைகளை முடுக்கி விட்டதுடன் சந்தேகம் நபர்களையும் துரிதமாக கைது செய்வதற்கு தேவையான நடவடிக்கையையும் மேற்கொண்டனர்.

இந்த நிலையில் நிந்தவூர் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்து மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்படும் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து திருடப்பட்ட நான்கு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# விபுலானந்தாவில் ஒஸ்கார் ஏற்பாட்டில் கற்றல் தேர்வு ஊக்குவிப்பு செயலமர்வு



காரைதீவு, ஒக். 07

அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியத்தின் அனுசரணையில் காரைதீவு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்வரும் க.பொ.த உயர்தர பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு ஊக்குவிக்கும்

நோக்கோடு கற்றல் தேர்வு ஊக்குவிப்பு நுட்பங்கள் செயலமர்வு நடத்தப்பட்டது.

பிரபல தொழில்சார் ஊக்குவிப்பு பயிற்சியாளர் கலாநிதி. கே.ரி.பிரசாந்தன் இச் செயலமர்வை நடத்தினார்.

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் அதிபர் ம. சுந்தரராஜன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக காரைதீவு கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஜே.டேவிட், உதவிக்கல்விப் பணிப்பாளரும் பாடசாலையின் பழைய மாணவர் சங்க ஆலோசகருமான வி.ரி.சகாதேவராஜா ,

ஒஸ்கார் செயற்குழு உறுப்பினர் இ.பிரதீபராஜ், கே.டி.பி.எஸ் தலைவர் மு.ரமணீதரன், சண்முகா அதிபர் செ.மணிமாறன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இவ் அமர்வுகளில் காரைதீவு விபுலானந்தா தேசிய பாடசாலை மற்றும் சண்முகா மகா வித்தியாலய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இச்செயல் அமர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(அ)

# சாய்ந்தமருதை சேர்ந்த றிகாஸ் கராத்தேயில் தங்கம் வென்றார்




அம்பாறை, ஒக். 06

இரண்டாவது திறந்த சர்வதேச கராத்தே சம்பியன்ஷிப் போட்டி இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

இதன்போது சோட்டகன் கராத்தே குமித்தே போட்டியில் எம்.எம்.றிகாஸ் தங்கப் பதக்கமும் காட்டா போட்டியில் வெண்கலப் பதக்கமும் பெற்று சம்பியனாகினார்.

இலங்கை கராத்தே கூட்டமைப்பின் கிழக்கு மாகாணத்தின் தலைவரும் கராத்தே பயிற்றுவிப்பாளருமான சிஹான் முஹம்மத் இக்பால் ஆசிரியரின் தலைமையில் நடைபெற்ற இப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சிஹான் அலோசியஸ் மாஸ்டர் இவருக்கான சான்றிதழ் மற்றும் பதக்கங்களை அணிவித்து கௌரவப்படுத்தினார். (அ)

# போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு

மட்டக்களப்பு, ஒக். 07

போரதீவுப்பற்று பிரதேச செயலகமும் சமுர்த்தித் திணைக்களமும் இணைந்து உலக சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை சிறப்பிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்த சர்வதேச முதியோர் தின விழா வெல்லாவெளி பிரதேசத்தின் பலாச்சோலை கருணைமலைப் பிள்ளையார் ஆலய முன்றலில் கடந்த செய்வாய்க்கிழமை இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் சோ. ரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கலை நிகழ்ச்சிகள் பல அரங்கேற்றப்பட்டதுடன் மாணவர்களுக்கு கற்கை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் பிரதேசத்தில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர பிரிவில் சித்தி பெற்ற மாணவர்கள், மற்றும் விசேட



ஆற்றல்களை வெளிப்படுத்திய சிரேஷ்ட பிரஜைகள் பலர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கபட்டதுடன் சிறார்கள் பலர் பரிசில்கள் வழங்கி மகிழ்விக்கப்படமையும் விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் வி.துலாஞ்சனன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ச.சசிகுமார், கணக்காளர் தி. அம்பிகாபதி, சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் அ.குககுமரன், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் செ. ஜெயராஜா உள்ளிட்ட போரதீவுப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

# காணி உறுதிப்பத்திரம் வழங்கல்

அம்பாறை, ஒக். 07

அம்பாறை - சம்மாந்துறை மல்வத்தை ஆயுள்வேத மத்திய மருந்தம் அமைந்துள்ள வைத்தியசாலைக்கான காணி உறுதிப் பத்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், குறித்த வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரத்தை கிழக்கு மாகாண சுதேச



மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதரிடம் வழங்கினார். (அ)

# ஆளில்லா விமான தாக்குதலில் சிரியாவில் 100 பேர் உயிரிழப்பு!

## பயங்கரவாதக் குழுக்கள் மீது குற்றச்சாட்டு

டமஸ்கஸ், ஒக். 07

**ஹோம்ஸ் நகரில் உள்ள சிரியாவின் இராணுவ பயிற்சி முகாம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட ஆளில்லா விமானம் தாக்குதலில் 100 பேர் கொல்லப்பட்டனர்.**

**இந்த தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**



இராணுவ அதிகாரிகளின் பட்டமளிப்பு விழாவொன்று நடைபெற்ற நிலையில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன்போது, குழந்தைகள் மற்றும் பெண்களும் உயிரிழந்துள்ளனர். வெடிபொருள் நிறைந்த ஆளில்லா விமானத்தினூடாக இலக்கு வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த தாக்குதல் சர்வதேச சக்திகளால் ஆதரிக்கப்படும் பயங்கரவாத குழுக்கள் என்று இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

எவ்வாறாயினும், நாட்டின் உள்நாட்டுப் போரில் அரசாங்கத்துடன் போராடும் கிளர்ச்சியாளர்கள் மற்றும் ஜிஹாதிகளிடமிருந்து இன்னும் குறித்த தாக்குதலுக்கு உரிமை கோரப்படவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# விமான நிலையங்களுக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல்!

## பிலிப்பைன்ஸில் கடும் பாதுகாப்பு



மணிலா, ஒக். 07

பிலிப்பைன்ஸில் வணிக விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதால், அந்நாட்டில் உள்ள 42 உள்ளூர் மற்றும் சர்வதேச விமான நிலையங்களுக்கு கடுமையான பாது காப்பை எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

அங்கு சில இடங்களுக்குச் செல்லும் விமானங்களுக்கு பிலிப்பைன்ஸ் விமானப் போக்குவரத்து சேவைகள் ஆணையம் மின்னஞ்சல் மூலம் இவ்வாறு வெடிகுண்டு எச்சரிக்கைகள் பெறப்பட்டதாக அறிவித்துள்ளது.

இதனால் பிலிப்பைன்ஸின் 42 விமான நிலையங்களிலும் பாதுகாப்பு கடுமையாக பலப்படுத்தப்பட்டுள்ளது.

வணிக விமானங்களில் வெடிகுண்டுகள் வீசப்படலாம் என்ற எச்சரிக்கை குறித்து தீவிரமான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அந்நாட்டு சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் தெரிவித்துள்ளது.

அனைத்து பிலிப்பைன்ஸ் வணிக மற்றும் ஏனைய விமான நிலையங்களிலும் "உடனடியாக மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள்" செயல்படுத்தப்பட்டு வருவதாக, பிலிப்பைன்ஸின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

பிலிப்பைன்ஸில் செபு மற்றும் பலவான் தீவுகள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் செல்லும் பிரபலமான இடமாகும். இவற்றுக்கும் செல்லும் விமானங்களுக்கும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாலியல் நோய் பரவுவதை தடுக்க உடலுறவுக்கு பின் நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பயன்படுத்த சட்டமூலம்

## அமெ. நோய் கட்டுப்பாடு, தடுப்பு மையம் தீர்மானம்




நியூயோர்க், ஒக். 07

பாலியல் நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்காக உடலுறவுக்குப் பிறகு நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பயன்படுத்துவது தொடர்பான சட்டமூலத்தை பரிந்துரைக்க அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சட்டமூலத்தின் பரிந்துரைகளின்படி, கிளமிடியா, கோனோரியா மற்றும் சிபிலிஸ் போன்ற நோய்களைத் தடுப்பதற்கான தொடர்புடைய வழிகாட்டுதல்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த திங்கட்கிழமை இணையத்தில் வெளியிடப்பட்டது.

முன்மொழியப்பட்ட வழிகாட்டுதல்களின் நோக்கம், பாக்டீரியல் நோய்த்தொற்றுகளைத் தடுக்க டாக்ஸிசைக்ளின் பயன்படுத்துவதைப் பற்றி அவர்களுக்குக் கற்பிக்க, சுகாதார வழங்குநர்களுக்கு மேம்படுத்தப்பட்ட மருத்துவ வழிகாட்டுதல்களை வழங்குவதாகும் என அமெரிக்க நோய் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

'டொக்ஸிபெப்' எனப்படும் இந்த முறைக்கான முன்மொழியப்பட்ட வழிகாட்டுதல்கள், ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்களுக்கும் திருநங்கைகளுக்கும் மட்டுமே பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மையத்தின் இயக்குனர் வைத்தியர் ஜொனாதன் மெர்மின், இந்த புதிய சுகாதார வழிகாட்டுதல்களுடன் முன்னோக்கிச் செல்ல பொதுமக்களின் பங்களிப்பு தேவை என்று தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எவ்வாறாயினும், பாதுகாப்பற்ற உடலுறவு கொண்ட 72 மணி நேரத்திற்குள் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு இது போன்ற நோய்த்தொற்றுகளைத் தடுக்க 200 மில்லிகிராம் மருந்தின் ஒரு டோஸ் போதுமானது என்று சமீபத்திய ஆராய்ச்சி கூறுகிறது. (அ)

# புதுடில்லியால் ஒட்டாவாவுக்கு வழங்கப்பட்ட இராஜதந்திர அடி

## முற்றுகிறது இரு நாட்டு முரண்பாடுகள்

புதுடில்லி, ஒக். 07

புதுடில்லியுடனான முரண்பாடுகளை தொடர்ந்து இந்தியாவிலிருந்து தமது தூதுவர்களை கனடா மீளப் பெற்றுவருகிறது.

புதுடில்லிக்கு வெளியில் இந்தியாவுக்கான கனேடிய தூதர், உதவி தூதுவர்கள் மற்றும் அதிகாரிகளை நியமிக்கும் முயற்சியில் ஜஸ்டின் ரூடோ அரசு செயல்பட்டு வருவதுடன், சிங்கப்பூர் அல்லது கோலாலம்பூருக்கு தற்போதைய தூதுவர்கள் மாற்றப்பட உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடா தனது பெரும்பாலான தூதர்களை கோலாலம்பூருக்கும் சிங்கப்பூருக்கும் மாற்றியுள்ளதாகவும் கனேடிய ஊடகமான சி.ரி.வி செய்தி தெரிவித்துள்ளது.

கனடாவில் சீக்கிய பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் கொல்லப்பட்டதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அண்மையில் கனடா பாராளுமன்றத்தில் பகிரங்கமாக குற்றம் சாட்டியதை தொடர்ந்து இந்தியா-கனடா இடையே இராஜதந்திர முரண்பாடுகள் ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து இரு நாடுகளிலும் இருந்து இராஜதந்திரிகளை வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து 41 இராஜதந்திரிகளை வெளியேற்றுமாறு கனடாவிடம் இந்தியா கேட்டுக்கொண்டது.



கனேடிய தூதர அதிகாரிகள் இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிடுவதாகக் குற்றம் சாட்டிய இந்திய வெளிவிவகார அமைச்சு, கனடாவில் உள்ள இந்திய இராஜதந்திரிகளைவிட இந்தியாவில் உள்ள கனேடிய இராஜதந்திரிகள் அதிகமாகும் எனவும் இந்தியா குற்றம் சுமத்தியது.

இந்த மாற்றத்தை செய்ய ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரை ஒட்டாவாவுக்கு புதுடெல்லி அவகாசம் அளித்ததாகக் கூறப்படுகிறது.

ஆனால், டில்லிக்கு வெளியே இந்தியாவில் பணிபுரியும் கனேடிய தூதர்களில் பெரும்பாலோர் கோலாலம்பூர் அல்லது சிங்கப்பூருக்கு வெளியேற்றப்பட்டதாக CTV தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து கனேடிய தூதரக அதிகாரிகளை குறைக்க வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கை, கனடாவில் இந்தியாவுக்கான விசா சேவைகளை நிறுத்திய பின்னர் புதுடில்லியால் கனடாவுக்கு வழங்கப்பட்ட இராஜதந்திர அடியாகும்.

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் விவகாரத்தில், இலக்கு வைத்து கொலை செய்தமை தொடர்பில் குற்றச்சாட்டு தொடர்பாக உளவுத் துறை தகவல் இருந்தால் அதை புது டெல்லிக்கு வழங்க வேண்டும் என்றும் இந்தியா கனடாவிடம் கூறியது.

கனடாவில் 21 இந்திய இராஜதந்திரிகளும், இந்தியாவில் 62 கனேடிய இராஜதந்திரிகளும் உள்ளனர். எனவே கூடுதலாக உள்ள 41 பேரை திரும்பப் பெற வேண்டும் என இந்தியா கோரிக்கை விடுத்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

ஈழநாடு



# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் முன் போராட்டம்!

## நீதிபதிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக

யாழ்ப்பாணம், ஒக். 07

**முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு குரல் கொடுக்கும் முகமாக கவனயீர்ப்பொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தின் யாழ்ப்பாண பிராந்திய அலுவகத்தின் முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த கவனயீர்ப்பு இடம்பெற்றது.

இலங்கை அரசே சட்டவாட்சியை பாதுகாக்க நீதித்துறைச் சுதந்திரத்தை உறுதி செய்ய வலியுறுத்தி போராட்டக்காரர்கள் பதாகைகளை தாங்கி நின்றனர்.

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சட்டத்தரணிகள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.




முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் காரணமாக பதவியில் இருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறி சென்றுள்ள நிலையில் அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமையை கண்டித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வட மாகாண அபிவிருத்திக்கு ஜீவன் தொண்டமான் ஆதரவு



கொழும்பு, ஒக். 07

வடமாகாணத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பல்வேறு அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்காக தன்னால் இயன்ற முழுமையான ஆதரவை வழங்கவுள்ளதாக, நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் உறுதியளித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸூக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் ஜீவன் தொண்டமான் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் அவர்கள் இருவரும் விரிவாக கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கலாசாலையில் சிறப்புற நடைபெற்ற ஆசிரியர் தினம்

## 'கலாசாலை தாயே' என்ற இசைப் பேழையும் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 07

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஆசிரியர் தின விழா நேற்றுக் காலை 9 மணிக்கு கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் ஆசிரிய மாணவர் தலைவர் சு. தனசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவனும் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரும் இசை அமைப்பாளரும் ஆகிய ஜேம்ஸ் அன்ரன் லூர்ஜினோவால் கலாசாலைத் தாயே என்ற இறுவெட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன் காணொளி வடிவத்தை பிரதம விருந்தினர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை திறன் பலகையின் (சிமார்ட் போர்ட்) ஊடாக வெளியிட்டு வைத்தார்.

தொடர்ந்து இசை அமைப்பாளருக்கான கௌரவம் மற்றும் பிரதம விருந்தினருக்கான கௌரவம் என்பன இடம் பெற்றன.

இந்நிகழ்வில் ஆசிரிய மாணவர்கள் கலாசாலை அதிபர் மற்றும் விரிவுரையாளர்களை கலாசாலை ஆலயத்திலிருந்து மாலை சூட்டி பாண்ட் அணி வகுப்பு மரியாதையுடன் ஊர்வலமாக அழைத்து வந்ததுடன் நினைவுச் சின்னங்களையும் வழங்கி கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

(அ)

# காணி சீர்திருத்த ஆணைக்குழு தலைவர் நிலந்த இராஜினாமா

கொழும்பு, ஒக். 07

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் நிலந்த விஜேசிங்க அந்தப் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பான இராஜினாமா கடிதம் நேற்று முன்தினம் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 40 ஏக்கர் காணி தொடர்பில் அரசியல்வாதி ஒருவருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகவே தலைவர் பதவி விலகியதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# முறிந்து விழும் அபாயத்தில் இருக்கும் வீதியோர மரங்களை அகற்ற பணிப்பு

கொழும்பு, ஒக். 07

முறிந்து விழும் அபாயத்தில் உள்ள வீதியோர மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன், அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், சுற்றாடல் அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கு, வீதியோரங்களில் விழும் அபாயத்தில் உள்ள பெரிய மரங்களை உடனடியாக ஆய்வு செய்து பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ள மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளார்.

நேற்றுக் காலை கொள்ளுப்பிட்டியில் பாதையில் பயணித்துக்கொண்டிருந்த பஸ் ஒன்றின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்த சம்பவத்தை அடுத்து இராஜாங்க அமைச்சர், உடனடியாக தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, முறிந்து விழும் அபாயத்தில் உள்ள வீதியோர மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

(அ)

# விருந்துபசாரத்தில் துப்பாக்கிச் சூடு!

## இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 07

குருநாகல், அம்பன்பொல - திம்பிரியாவ பகுதியில் உள்ள வீட்டொன்றில் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வில் இளைஞர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விருந்துபசார நிகழ்வின் போது ஏற்பட்ட மோதல் காரணமாகவே வீட்டின் உரிமையாளரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதில் 27 வயதான குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இது குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# அதிவேக வீதி நுழைவாயில் கதவு மைத்திரியின் கார் மீது வீழ்ந்தது!

கொழும்பு, ஒக். 07

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயணித்த காரின் மீது, நுழைவாயில் கதவொன்று நேற்று முன் தினம் வீழ்ந்தமை தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் பிரிவினரால் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

மத்திய அதிவேக வீதியின் குருநாகல் நுழைவாயிலிலுள்ள கதவொன்றே, இவ்வாறு காரின் மீது வீழ்ந்துள்ளது.

இதற்கு முன்னரும் இவ்வாறான சம்பவமொன்று நேர்ந்துள்ளதாக பாதுகாப்பு பிரிவை மேற்கோள்காட்டி, ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதிவேக வீதியின் நுழைவாயிலில் இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஒரே அதிகாரியே கடமையாற்றியிருந்தார் என்பது தொடர்பிலும் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது.

(அ)

## யாழ்...

இதனிடையே ஜனாதிபதியின் வருகையின் போது முல்லைதீவு நீதிபதி விவகாரத்துக்கு நீதி கோரி போராட்டங்களை முன்னெடுக்க தமிழ் தரப்புகள் தயாராகி வருகின்றன என்றும் அறிய வருகின்றது.

## பேருந்து...

இந்த விபத்து இடம்பெற்றது. கொழும்பு கோட்டை யிலிருந்து மத்துகம நோக்கி பயணித்த பேருந்தே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது.

இந்த விபத்து இடம்பெற்றபோது 35 பேர் பயணித்திருந்தனர். விபத்தில் காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தையடுத்து டுப்ளிகேஷன் வீதி முழுமையாக போக்குவரத்து தடைப்பட்டது.

இதனிடையே, விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## மு.காவிலிருந்து...

போட்டியிட்டு 17 ஆயிரத்து 599 வாக்குகளை பெற்று நசீர் அஹமட் பாராளுமன்றத்துக்கு தெரிவானார்.

கட்சி எடுத்த தீர்மானத்துக்கு மாறாக வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்ததுடன், கட்சியின் முடிவுக்கு மாறாக அமைச்சு பதவியையும் பெற்றுக் கொண்டார். இதையடுத்து, அவரை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்க கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் நடவடிக்கை எடுத்தது. இதனை அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

இந்தக் கடிதத்தை ஆட்சேபித்து நசீர் அஹமட் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், ப்ரீதி பத்மன் சூரசேன, எஸ். துரைராஜா, மகிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழு நேற்று தீர்ப்பை வழங்கியது.

அதில், நசீர் அஹமட் தாக்கல் செய்திருந்த மனுவை நிராகரித்த நீதியரசர்கள், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நசீர் அஹமட் நீக்கப்பட்டமை சரியானதும் சட்டபூர்வமானதுமானதும் என்று அறிவித்தனர்.

இதனிடையே, இந்தத் தீர்ப்பின் பிரகாரம், நசீர் அஹமட்டின் பாராளுமன்ற பதவி வறிதாவதாக சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு இரண்டாவது அதிக வாக்குகளை பெற்ற அலி சாஹிர் மௌலானாவை பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். இதற்கான கடிதம் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேசமயம், உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். "கடந்த 25 வருடங்களாக கட்சி மாறுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் நீதிமன்றத்தில் தங்களுக்கு சாதகமான தீர்ப்புகளைத்தான் பெற்று வந்திருக்கிறார்கள். ஆகையால், இது அதற்கு மாறுபட்ட ஒரு தீர்ப்பாக அமைந்துள்ளது", என்றும் அவர் கூறினார்.

இதேநேரம், "அமைச்சு பதவிக்காக கட்சி மாறுபவர்களுக்கு இதுவோர் எச்சரிக்கையாக இருக்கும் என சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார். (ஐ)

## மக்கள்...

வழிபாடாற்றினார். அங்கு அவரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

எதிர்கால அரசியல் குறித்து அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். இதன்போது,

"நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் வகையிலான தலைவர் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்துக்கு தெரிவு செய்யப்படுவார். எமது அணியில் இளைஞர்கள் பலரும் உள்ளனர். எதிர்காலத்தில் அவர்களுக்கு ஆதரவை வழங்கி முன் கொண்டு செல்ல எதிர்பார்க்கிறோம்.

நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் வகையிலான மூத்தவர் ஒருவருக்கு கட்சி தலைமைத்துவத்தை வழங்க எதிர்பார்க்கிறேம். மக்கள் ஏற்று கொள்ளும் உறுப்பினருக்கு தலைமைத்துவம் வழங்கப்படும். மக்களே எனக்கும் தலைமைத்துவத்தை வழங்கினார்கள் எதிர்காலத்திலும் அவ்வாறே இடம்பெறும் - என்றார். (ஐ)

## அரசியல்..

பிரச்னைக்கு தீர்வு காண அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கா மல் தொழில் துறையினருடன் முரண்பட்டுக் கொண்டிருக்கிறது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஒத்திவைப்பு பிரேரணையில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

படித்த இளம் தலைமுறையினர் நாட்டை விட்டு வெளியேறுவதை பிரதான நோக்கமாக கொண்டுள்ளார்கள். 30 வருட கால யுத்த காலத்தில் புத்திஜீவி கள் வெளியேறியமை போன்று தற் போதும் வெளியேறினார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. யுத்த காலத்தை காட்டிலும் தற்போது புத்திஜீவிகள் வெளியேற்றம் தீவிரமடைந்துள்ளது.

விசேட மருத்துவர்கள், மருத்துவர்கள் உட்பட சுகாதார தரப்பினர் நாட்டை விட்டு வெளியேறுவது பாரதூரமானது. மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் சுகாதார கட்டமைப்பு மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நடுத்தர மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளார்கள். ஒரு மருத்துவர் ஒருநாளைக்கு குறைந்தபட்சம் 50 பேருக்கு சாதாரண சிகிச்சையளிக்க முடியும்.

ஆனால, தற்போதைய நிலையில் அரச மருத்துவமனைகளில் மருத்துவர் ஒருவர் ஒரு நாளைக்கு 200இற்கும் அதிகமானோருக்கு சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது. சுகாதார கட்டமைப்பை போன்று பல்கலைக்கழக கல்வி கட்டமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. விரிவுரையாளர்கள் பற்றாக்குறை காரணமாகப் பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இது மிகவும் பாரதூரமானது. கல்வித் துறை வீழ்ச்சியடைந்தால் சிறந்த எதிர்கால தலைமுறையினரை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

புத்திஜீவிகள் வெளியேற்றத்துக்கு தீர்வு காண அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது,தொழில் துறையினருடன் பேச்சுகள் மேற்கொள்வதை தவிர்த்து அவர்களுடன் அரசாங்கம் முரண்பட்டுக் கொண்டிருக்கிறது. நாட்டில் அரசியல் நெருக்கடி தோற்றம் பெற்றதன் பின்னரே சகல பிரச்னைகளும் தோற்றம் பெற்றன. இன்று ஆளும் கட்சியும் பிளவடைந்துள்ளது, எதிர்க் கட்சிகளும் பிளவடைந்துள்ளன.

இவ்வாறான நிலையில் எந்தப் பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியாது. நாட்டில் அரசியல் ஸ்திரதன்மையுடன்தான் சகல பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியும். ஆகவே, உடனடியாக தேசிய தேர்தல்களை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# உயர்தர பரீட்சைக்கு விண்ணப்ப திகதி நீடிப்பு

கொழும்பு, ஒக். 07

*2023 கல்வி பொது தராதர உயர் தர பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

*இம்முறை பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பிக்க முடியாத மாணவர்களின் நலன் கருதி விண்ணப்ப காலம் நீடிக்கப் பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.*

*2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர உயர் தர பரீட்சையை 2024 ஜனவரி 04 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.* (ஐ)

## புத்திஜீவிகளை...

மேலும், நாட்டின் முக்கியமான அனைத்து துறைகளைச் சேர்ந்த புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். கடந்த சில வருடங்களாக புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறும் வீதம் அதிகரித்து செல்கிறது. ஆனால், இது தொடர்பாக தேடிப் பார்க்க அரசாங்கம் அமைச்சரவை உப குழுவையாவது அமைக்க தவறிவிட்டது.

குறைந்தபட்சம் பாராளுமன்ற தெரிவுக்குழுவையாவது அமைக்கவும் தவறி விட்டது. ஆனால், புத்திஜீவிகள் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறும் நடவடிக்கை கடந்த காலங்களிலும் இடம்பெற்றன.

1974இல் சிறிமா பண்டாரநாயக்க அம்மையாரின் காலத்தில் இவ்வாறு புத்திஜீவிகள் வெளியேற ஆரம்பித்த போது, இது தொடர்பாக தேடிப்பார்க்க அமைச்சரவை உபகுழுவை அமைத்து நடவடிக்கை எடுத்திருந்தது.

மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி நாட்டை ஸ்திரப்படுத்த சிறந்த வாய்ப்பு என அரசாங்கம் தெரிவித்து வந்தது. ஆனால் வெரிடேச் ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையின் பிரகாரம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியால் எமது நாட்டில் நூற்றுக்கு 28 வீதமானவர்களுக்கே நன்மை கிடைக்கிறது. ஆனால், தற்போது நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் உதவி தற்போது தாமதமடைந்துள்ளதால் அந்தத் தொகையும் குறைவடையும் என்றே நினைக்கிறேன்.

நாட்டில் இருக்கும் புத்திஜீவிகள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான காரணங்களை தேடிப்பார்க்கும்போது, வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, வாய்ப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளமை, அரசியல் ஸ்திரதன்மை இல்லாமை, வெளிநாடுகளில் வழங்கப்படும் அதிக சம்பள வசதிகள், பணவீக்க அதிகரிப்பு, உணவு பாதுகாப்பு இல்லாமை போன்ற விடயங்களே அமைந்துள்ளன.

அரசாங்கம் தேசிய வருமானத்தை அதிகரிப்பதற்கு வரி அதிகரிப்பையே மேற்கொண்டுள்ளது. ஆனால், இந்த வரி அதிகரிப்பு சாதாரண மக்கள் மீது சுமையை அதிகரிக்கும் வகையிலேயே மேற்கொண்டிருக்கிறது. தனவந்தர்கள் பெரும் நிறுவனங்களுக்கு எந்தவித வரி அதிகரிப்பு இல்லை.

எனவே, அரசாங்கத்தின் முறையற்ற தீர்மானங்கள் மற்றும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப மேற்கொள்ளும் பிழையான நடவடிக்கை போன்ற காரணங்களாலே புத்திஜீவிகளின் வெளியேற்றம் அதிகரித்து வருகிறது. உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் புத்திஜீவிகளின் வெளியேற்றத்தில் எமது நாடு உயர்ந்த நிலையில் இருந்து வருகிறது. அதனால் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கத்தவறினால் நாட்டின் முக்கியமான அனைத்து துறைகளும் செயலிழக்கும் அபாயம் உள்ளது - என்றார்.

(ஐ)

# சுகாதார துறை மோசடிகளுக்கு தீர்வு காண குழு!

கொழும்பு, ஒக். 07

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவும், சுகாதாரத் துறையு டன் தொடர்பான பல்வேறு நிறுவனங்களில் அவருக்கு நெருக்கமானவர்களும் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் மோசடி யான கொடுக்கல் - வாங்கல் உட்பட தற்போது சுகாதாரத்துறை எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்காக எதிர்க்கட்சி தலை வர் சஜித் பிரேமதாஸ தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சீர்கேடு தொடர்பான மேலதிக தலையீடுகளை மேற்கொள்ளும் நோக்கில் எதிர்க்கட்சி ஒன்றியம் வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கூடி கலந்துரையாடியது. இதன் போது இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதன் போது கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சி தலைவர்,

தரக்குறைவான மருந்துப் பொருட்கள் பாவனையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எதிர்க்கட்சியில் இருந்து நிவாரண திட்டத்தை செயல்படுத்தவும் இந்த மோசடிகளில் ஈடுபட்டு வரும் நபர்களுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## அரச...

என்று கூறப்பட்டது.

ஆனால், மத்திய வங்கியின் ஆளுநர் அவ்வாறானவற்றை உறுதிப்படுத்தாத காரணத்தால் இரு தரப்பினரும் முரண்பாடான கதைகளை கூறி வருகின்றன. தேசிய சேமிப்பு வங்கியை விற்க அதிகாரிகள் ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் அவர் சாடினார்.

## மயிலத்தமடு...

முன்பாக பேராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேநேரம், தமிழ் கால்நடை பண்ணையாளர்கள் நேற்றுடன் 22ஆவது நாளாக சித்தாண்டி மகா வித்தியாலயம் முன்பாக பந்தல் அமைத்து போராடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, "மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பு தொடர்பாக ஏறாவூர் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதும் ஆக்கிரமிப்பாளர்கள் எவரும் வருகை தராததால் வழக்கு பிற்போடப்பட்டது", என்றும் மக்கள் மேலும் சாடினர்.

தவிர, தமது பிரச்னைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு வருகை தரும்போது தீர்வு தர வேண்டும் என்றும் அவர்கள் கோரினர். (ஐ)

## அடுத்த...

என்பவற்றை கண்டித்தும் நீதிபதி விவகாரத்தில் முழுமையான விசாரணை நடத்த வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

எனினும், யாழ்ப்பாணம் வணிகர் கழகம் மற்றும் வர்த்தக சங்கங்கள், பொது அமைப்புகளுடன் கலந்துரையாடிய பின்னர் ஹர்த்தால் திகதி அறிவிக்கப்படும் என்று நேற்றைய தினம் சந்தித்த கட்சிகளின் தலைவர்களுள் ஒருவரான என். சிறீகாந்தா தெரிவித்தார்.

இதேநேரம், ஹர்த்தாலுக்கான திகதி தொடர்பில் யாழ். வணிகர் கழகம் உள்ளிட்ட வர்த்தக சங்கங்களுடன் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கும் ஏனைய அமைப்புகளுடன் திங்கட்கிழமை காலையும் பேச்சு நடத்தப்படும் என்று தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த இந்த சந்திப்பில் இலங்கை தமிழரசு கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ், தமிழ்த் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி என்பன பங்கேற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழ் எம்.பிக்கள் நேற்று சபையில் ஆர்ப்பாட்டம்!

## மயிலத்தமடு பிரச்னைக்கு நீதி கோரி

கொழும்பு, ஒக். 07

**மயிலத்தமடு மேய்ச்சல் தரை பண்ணையாளர்களுக்கு நீதி வழங்கக் கோரி பாராளுமன்றில் கோரிக்கைகளை முன்வைத்து பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தார்.**

நேற்று வெள்ளிக்கிழமை காலை பாராளுமன்றம் கூடியபோது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டார்.

இதன் பின்னர் வேண்டும் வேண்டும் எமது நிலம் எமக்கு வேண்டும், அழிக்காதே அழிக்காதே தமிழர்களின்



நிலங்களை அழிக்காதே என்ற கோஷங்கள் அடங்கிய பதாகைகளை கையிலேந்தி பாராளுமன்றத்தில் சபாநாயகரின் ஆசனத்துக்கு முன் தமிழ் எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# கொழும்பில் குண்டுத் தாக்குதல் திட்டம் உண்மையா? பொய்யா?

## சபையில் கேள்வி எழுப்பினார் சஜித்



கொழும்பு, ஒக். 07

கொழும்பில் 7 முக்கியமான இடங்களில் குண்டு தாக்குதலை நடத்த திட்டம் என்ற தலைமைப்பின் அரச பத்திரிகையான தினமினவில் செய்தி வெளியாகியுள்ளது எனவும் அது சம்பந்தமாக பாராளுமன்றத்துக்கும் நாட்டு மக்களுக்கு சரியான முறையில் தெளிவுப்படுத்துமாறும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகள் இந்த திட்டத்தை தீட்டியுள்ளதாக தெரியவருகிறது. இது மிகவும் பாரதூரமான விடயம் என்பதால், அதில் உண்மை, பொய் சம்பந்தாமாக மேலதிக விசாரணைகளை நடத்துங்கள்.

மீண்டும் பயங்கரவாதம் தலைத்தூக்க இடமளிக்க முடியாது என்பதால், கடந்த காலங்கிளல் பாடங்களை பற்று ஆபத்து குறித்து தேடிப்பாருங்கள்.

மேலும் பயங்கரவாதத்தை அடக்குவதற்காக நாட்டின் சட்டத்திற்குள் எடுக்க வேண்டிய உச்சபட்ச நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்-என்றார். (அ)

# யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி மாயம்!

## பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 07

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவியை காணவில்லை என மாணவியின் பெற்றோரினால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பகுதியை சேர்ந்த மாணவியே காணாமல் போயுள்ளார்.

மாணவி யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு அருகில் உள்ள மருத்துவ பீட மாணவர் விடுதியில் தங்கியிருந்து தனது கற்றல் நடவடிக்கையை மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 3ஆம் திகதி முதல் அவரது தொலைபேசி இயங்காத நிலையில், அவரை தேடி அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பெற்றோர் சென்றுள்ளனர்.

விடுதியில் பெற்றோர் விசாரித்த போது, மாணவி செவ்வாய்க்கிழமை விடுதியில் இருந்து வெளியேறி சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை அடுத்து பெற்றோரினால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# எங்கள் இரண்டு எம்.பிக்கள் பதவி விலகினால் ஏனைய 11 பேரும் இனத்தை காட்டி கொடுப்பர்!

## முன்னணியின் முக்கியஸ்தர் காண்டீபன் கூறுகிறார்



யாழ்ப்பாணம், ஒக். 07

"நீதிபதி சரவணராஜா விடயத்தில் மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக - முன்மாதிரியானவர்களாக எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இராஜிநாமா செய்வார்கள். ஆனால், வெறுமனே நாங்கள் இராஜிநாமா செய்வதன் மூலம் 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்து எங்கள் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் அரசியலுக்கு என்றைக்கும் நாங்கள் வழிவிட்டுக் கொடுக்கமாட்டோம்."

-இப்படி தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரான ந. காண்டீபன்.

டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியில் இன்று சனிக்கிழமை இரவு 10 மணிக்கு ஒளிபரப்பாகவுள்ள நெற்றிக்கண் நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீதித்துறைக்கு - குறிப்பாக நீதிபதி சரவணராஜா விவகாரத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுபட்டு பதவி விலக வேண்டும் - இதன் மூலம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற கருத்து மக்கள் மத்தியில் வலுப்பெற்று வருகின்றது. இது விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு குறித்து நெறியாளர் காண்டீபனிடம் கேள்வி எழுப்பினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வடக்கு, கிழக்கில் 18 உறுப்பினர்கள். இவர்களில் 5 பேர் சிங்கள - பௌத்த பேரினவாத அரசின் ஒற்றையாட்சி கட்டமைப்பை ஏற்று அமைச்சர்களாக இருப்போர். கிழக்கில் பிள்ளையான், வியாழேந்திரன் வடக்கில் திலீபன், டக்ளஸ், அங்கஜன் ஆகியோர். மீதமிருப்பவர்கள் 13 பேர். இவர்கள் தமிழ்த் தேசியம் பேசுவதாக சொல்லப்படும் கட்சிகளுக்குள் இருப்பவர்கள். விக்னேஸ்வரன் ஒருவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 10 பேர். எங்கள் கட்சியில் இருவர்.

நாம் இந்த சிங்கள அரசுக்கு சொல்லவேண்டிய நிலைப்பாட்டில் தெளிவாக இருக்கிறோம். நீதிபதி விலகியது விடயமல்ல. அவர் பதவி விலகக் காரணமாக இருந்த அத்திபாரமான கொள்கை நிலைப்பாட்டையே எதிர்க்க வேண்டும்.ஆனால், 13 ஆரம்பப் புள்ளி 13 மைனஸ் 13 பிளஸ் என்று கூறிக்கொண்டிருக்கும். ஆனால், இந்த அடிப்படைக் கட்டமைப்பில் - இந்த இடத்தில்தானே எங்கள் நிலம் பறிபோகிறது.

வடக்கு மாகாண சபை ஆட்சியில் இருக்கும்போது - மனோ கணேசன் தேசிய ஒருமைப்பாடு அமைச்சராக இருந்தபோதுதானே தையிட்டியில் 2018 ஒகஸ்ட் 22ஆம் திகதி விகாரைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த நிலையில், கொள்கை நிலப்பட்டு மக்களை நாங்கள் தயார்படுத்தாமல் இந்த முடிவுகளை எடுக்க முடியாது. இன்றும் முன்மாதிரியானவர்களாக எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இராஜிநாமா செய்வார்கள். ஆனால், வெறுமனே நாங்கள் இராஜிநாமா செய்வதன் மூலம் 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்து எங்கள் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் அரசியலுக்கு என்றைக்கும் நாங்கள் வழிவிட்டுக் கொடுக்க மாட்டோம் - என்றார். (அ)

# உயர் நீதிமன்றத் தீர்ப்பு வரலாற்று சிறப்புமிக்கது

## நிசாம் காரியப்பர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 07

பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட்டுக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எதிர்காலத்தில் கட்சி மாறும் அரசியல்வாதிகளுக்கு சிறந்த பாடம் என முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

நசீர் அஹமட் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்டமை செல்லுப்படியான, சட்ட ரீதியான நடவடிக்கை என உயர் நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பு தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள காரியப்பர்,

அமைச்சு பதவியை பெற்றுக்கொண்ட நசீர் அஹமட்டை கட்சியில் இருந்து நீக்கி நான் அனுப்பிய கடிதம் நியாயமானது, செல்லுப்படியானது என உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரலாற்று சிறப்புமிக்கது.

இனிவரும் காலங்களில் அமைச்சு பதவிகளுக்காக கட்சி மாறும் நபர்களுக்கு மிகப் பெரிய எச்சரிக்கை-என்றார்.

அதேவேளை, நசீர் அஹமட் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்டமை சட்டரீதியானது மற்றும் செல்லுப்படியானது என உயர் நீதிமன்றத்தில் மூன்று நீதியரசர்கள் ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு கடந்த 20, 25 ஆண்டு காலத்தில் இப்படியான வழக்குகளில் தீர்ப்பு மற்றைய தரப்பு சாதகமாகவே வழங்கப்பட்டு வந்தது எனவும் சுமந்திரன் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உலகக் கிண்ணம்:

# நடப்பு சம்பியனை வீழ்த்தியது நியூசி.




அகமதாபாத், ஒக். 07

13ஆவது ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடர் இந்தியாவில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. தொடக்க ஆட்டத்தில் நடப்பு சம்பியனான இங்கிலாந்து, நியூசிலாந்துடன் மோதியது. அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து களத்தடுப்பைத் பதிவு செய்தது.

கேன் வில்லியம்சன் காயம் காரணமாக களமிறங்கவில்லை. இதனால் ரொம் லதாம் அணியை வழிநடத்தினார். முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 282 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக ஜோ ரூட் 86 பந்துகளை சந்தித்து ஒரு சிக்ஸர், 4 பௌண்ட்ரிகளுடன் 77 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரிவர்ஸ் ஸ்வீப்ஷாட் விளையாட முயன்று கிளென்பிலிப்ஸ் பந்தில் போல்டானார். அணித் தலைவர் ஜோஸ் பட்லர் 42 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 43 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் மேட் ஹென்றி பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார்.

ஜொன்னி பெயர்ஸ்ரோ 33, டேவிட் மலன் 14, ஹரி புரூக் 25, மொயின்அலி 11, லியாம் லிவிங்ஸ்டன் 20, சேம் கரன் 14, கிறிஸ் வோக்ஸ் 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். மார்க்வூட் 13, ஆதில் ரஷீத் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நியூசிலாந்து அணியின் பந்துவீச்சாளர்கள் சீரான இடைவெளியில் விக்கெட்களை வீழ்த்தி அழுத்தம் கொடுத்தனர். இதனால் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர்களால் ஆக்ரோஷமான துடுப்பாட்ட அணுகுமுறையை கடைபிடிக்க முடியவில்லை.

பந்து வீச்சில் மேட் ஹென்றி 3 விக்கெட்களையும் மிட்செல் சாண்ட்னர், கிளென் பிலிப்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். 283 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி தொடக்கத்திலேயேஅதிரடி காட்டியது. முதல் ஓவரில் டெவன் கொன்வே 10 ஓட்டங்கள் விளாசிய நிலையில் அடுத்த ஓவரின் முதல் பந்தில் வில் யங் (0) ஆட்டமிழந்தார். இதன் பின்னர் களமிறங்கிய 23 வயதான ரச்சின் ரவீந்திரா, கான்வேயுடன் இணைந்து இங்கிலாந்து அணியின் பந்து வீச்சை கடும் சிதைவுக்கு உட்படுத்தினார்.

இந்த ஜோடி மைதானத்தின் அனைத்து பகுதிகளுக்கும் பந்துகளை பௌண்ட்ரிக்கும், சிக்ஸருக்கும் விரட்டியது. அதிரடியாக விளையாடிய டெவன் கொன்வே 83 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 13 பௌண்ட்ரிகளுடன் தனது 5ஆவது சதத்தை விளாசினார். அவருக்கு உறுதுணையாக அதிரடி காட்டிய ரச்சின் ரவீந்திரா 82 பந்துகளில், 9 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் தனது முதல் சதத்தை அடித்தார். இதன் மூலம் உலகக் கிண்ணத் தொடரில் இளம் வயதில் சதம் விளாசிய நியூசிலாந்து வீரர் என்ற பெருமையை அவர், பெற்றார்.

டெவன் கொன்வே, ரச்சின் ரவீந்திரா அதிரடியால் நியூசிலாந்து அணி 82 பந்துகளை மீதம் வைத்து 36.2 ஓவர்களிலேயே மேற்கொண்டு விக்கெட்டை இழக்காமல் 283 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. டெவன் கொன்வே 121 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 19 பௌண்ட்ரிகளுடன் 152 ஓட்டங்களும், ரச்சின் ரவீந்திரா 96 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 11 பௌண்ட்ரிகளுடன் 123 ஓட்டங்களும் விளாசினர். இந்த ஜோடி 2-வது விக்கெட்டுக்கு 273 ஓட்டங்கள் குவித்தது. நியூசிலாந்து அணியின் இந்த வெற்றியானது கடந்த உலகக் கோப்பை தொடரின் இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்திடம் அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுக்கும் விதமாக அமைந்திருந்தது.




# இந்தியாவை சமாளிக்கும் உத்தி எம்மிடம் உள்ளது!

சென்னை, ஒக். 07

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்தியா தனது முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவுடன் நாளை சென்னையில் மோதுகிறது. இந்நிலையில் தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் கூறியதாவது:

இந்தியாவில் ஒருநாள் போட்டிகளில் எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் அதிகம் விளையாடி உள்ளனர். எனவே பெரும்பாலான இந்திய பந்துவீச்சாளர்களை அவர்கள் நன்கு அறிவார்கள். அவர்களுக்கு எதிராக திட்டங்கள் வைத்துள்ளனர். இதனால் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறோம். வோர்ணரிடம் இருந்து சிறந்த செயல் திறனை எதிர்பார்க்கிறேன்.

ஆடம் ஸம்பாவுக்கு உறுதுணையாக கிளென் மேக்ஸ்வெல் 10 ஓவர்களை வீசும் திறன் கொண்டவர். அவர், துடுப்பபாட்டத்தில் சிறப்பாக செயல்படாவிட்டால் பந்து வீச்சில் பங்களிப்பை கொடுக்கக்கூடியவர். உலகக் கிண்ணத் தொடரில் மக்ஸ்வெல் ஆக்கபூர்வமானவராக இருப்பார்.

இந்த தொடர் 50 வருட வரலாற்றை கொண்டுள்ளது. சொந்த மண்ணில் இந்திய அணிவலுவானது. இங்கிலாந்து நடப்பு சம்பியனாக இருக்கிறது. நியூசிலாந்து அணி ஐசிசி தொடர்களின் இறுதிப்போட்டிகளில் இருந்துள்ளது. தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளும் வலுவாக உள்ளன. இதனால் அரை இறுதிக்கு முன்னேறும் 4 அணிகளுக்கும் இந்த தொடர் கடினமாகவே இருக்கும்.

பாதகம் ஏற்படுத்தக்கூடிய அணியாக ஆப்கானிஸ்தான் இருக்கக்கூடும். ஏனெனில் வலுவானஅணிகளுள் ஒன்றாக அவர்கள், பேசப்படுகிறார்கள். அவர்களுக்கு சில உயர்தர சுழற்பந்து வீச்சாளர்கள் மற்றும் துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர், அவர்கள் சிறந்த அளவில் ஓட்டங்களை எடுத்துள்ளனர் - என்றார். (ஐ)




# வேகமான 1,000 ஓட்டங்கள்

அகமதாபாத், ஒக். 07

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விரைவாக ஆயிரம் ஓட்டங்களை எட்டிய நியூசிலாந்து வீரர் என்ற சாதனையை டெவன் கொன்வே படைத்துள்ளார்.

இந்த மைல் கல் சாதனையை அவர், 22 போட்டிகளில் நிகழ்த்தி உள்ளார். இதற்கு முன்னர் கிளென் டர்னர் 24 ஆட்டங்களில் 1,000 ஓட்டங்களை எட்டியதே சாதனையாக இருந்தது. (ஐ)

## ஆசிய விளையாட்டு:

# பங்களாதேஷை வீழ்த்தி இறுதியில் இந்திய அணி!

ஹாங்சோ, ஒக். 07

ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஆண்கள் கிரிக்கெட் தொடரின் அரையிறுதியில் வங்கதேசத்தை எளிதில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது ருதுராஜ் கெய்க்வாட் தலைமையிலான இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் களத்தடுப்பில் ஈடுபட இந்திய அணித் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட் எடுத்த முடிவுக்கு இந்திய பந்துவீச்சாளர்கள் நியாயம் சேர்த்தனர்.

96 ஓட்டங்களுக்கு பங்களாதேஷை கட்டுப்படுத்தினர். தமிழகத்தைச் சேர்ந்த சாய் கிஷோர் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தினார். 4 ஓவர்கள் வீசி 12 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து 3 விக்கெட்களை அவர் வீழ்த்தினார். இதே போல் மற்றொரு வீரர் வாஷிங்டன் சுந்தர் 15 ஓட்டங் கள் விட்டுக் கொடுத்து 2 விக்கெட் வீழ்த்தினார். இருவரின் அபார பந்துவீச்சு காரணமாக பங்களாதேஷ் அணியால் 20 ஓவர்களுக்கு 9 விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.




97 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணிக்கு ஜெய்ஸ்வால் பூச்சியத்தில் ஆட்டமிழந்தாலும், திலக் வர்மா மற்றும் ருதுராஜ் கெய்க்வாட் இணைந்து அணியை வெற்றிப் பாதை நோக்கி அழைத்துச் சென்றனர். இருவரும் பங்களாதேஷ் பந்துவீச்சாளர்களை அலறவிட்டனர். இதனால் 9.2 ஓவர்களிலேயே இந்திய அணி 97 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. திலக் வர்மா 26 பந்துகளில் 55 ஓட்டங்களும் மற்றும் கெய்க்வாட் 26 பந்துகளில் 40 ஓட்டங்களும் எடுத்து வெற்றிக்கு உதவினர். இன்று நடக்கும் இறுதிப் போட்டியில் ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது இந்திய அணி.

# இந்தியா - ஐரோப்பா பொருளாதார வழித்தடம்: சீனாவின் பட்டுப் பாதையுடன் போட்டியிட முடியுமா?

**நிகில் இனாம்தார்**

புதுடில்லியில் நடைபெற்ற ஜி20 மாநாட்டை ஒட்டி அறிவிக்கப்பட்ட புதிய போக்குவரத்து வழித்தடம், வரும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு உலக வர்த்தகத்தின் அடிப்படையாக மாறும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி சமீபத்திய வானொலி உரையில் தெரிவித்தார். உண்மையில் அதற்கான சாத்தியக்கூறு உள்ளதா?

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் சவூதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மான் ஆகியோர் கடந்த ஆண்டு இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடத்தை அறிவித்ததன் மூலம், ஒரு மோசமான உறவின் பாதையில் இருந்து திடமான கைகுலுக்கலுக்கு மாறினர். (சவூதி அரேபியாவை ஒரு உலகளாவிய பாரிய நாடாக மாற்றுவதாக பைடன் ஒருமுறை சபதம் செய்திருந்தார்.)

ரயில் மற்றும் கப்பல் நெட்வொர்க்குகள் மூலம் ஆசியாவுக்கும், ஐரோப்பாவிற்கும் இடையே போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு இணைப்புகளை வலுப்படுத்த தொடங்கப்பட்ட திட்டம், பிராந்தியத்திற்கு நன்மை பயக்கும் அதே வேளையில், அமெரிக்க வெளியுறவுக் கொள்கையையும் ஆதரிக்கிறது. “இதை எளிமையாகச் சொன்னால், சீனாவிற்கு எதிராக அமெரிக்க நலன்களை மேலும் அதிகரிக்கும்,” என்று ஃபாரீன் பாலிசி (**Foreign Policy**) இதழின் தலைமைச் செய்தி ஆசிரியர் ரவி அகர்வால் தெரிவித்தார்.

திட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதன் மூலம் அமெரிக்காவுக்குப் பொருளாதார ரீதியில் எந்தப் பயனும் இல்லை. “ஆனால் இதை கேம்ப் டேவிட்டில் நடைபெற்ற ஜப்பான்-தென் கொரியா உச்சி மாநாட்டின் வரிசையில் சேர்க்கலாம்” என்கிறார் கனெக்டோ கிராஃபியின் ஆசிரியர் பராக் கன்னா. சீனா தனது விஸ்தரிப்பை அதிகரித்து வருவதை எதிர்கொள்ளும் வகையில் இரு பசிபிக் நாடுகளின் உறவில் ஒரு சலனத்தை ஏற்படுத்துவதன் மூலம்,



அமெரிக்கா தனது இராஜதந்திர இருப்பைத் தக்கவைத்தது.

தென்கிழக்கு ஆசியா, மத்திய ஆசியா, ரஷ்யா மற்றும் ஐரோப்பாவுடன் சீனாவை இணைக்கும் உலகளாவிய உள்கட்டமைப்பு-கட்டுமான திட்டமான சீனாவின் புதிய பட்டுப்பாதை திட்டம் என்று வர்ணிக்கப்படும் பெல்ட் அண்ட் ரோடு முயற்சிக்கு (பிஆர்ஐ) அமெரிக்க எதிர்ப்பாகவும் இந்தத் திட்டம் பலரால் பார்க்கப்படுகிறது.

### புதிய பட்டுப்பாதையுடன் போட்டியிட முடியுமா?

சீன அதிபர் ஷி ஜின்பிங், பெல்ட் அண்டு ரோடு திட்டத்தை அறிமுகப்படுத்தி பத்தாண்டுகள் நிறைவடைகின்றன.

சீனாவின் பொருளாதார மந்தநிலைக்கு மத்தியில் திட்டங்களுக்கு கடன் வழங்குவது குறைந்துள்ளதால், இத் திட்டத்தின் பெரும் லட்சியங்கள் கணிசமாக குறைந்துவிட்டதாக சிலர் கூறுகின்றனர். இத்தாலி போன்ற நாடுகள் இத்திட்டத்தைத் திரும்பப் பெறுவதற்கான தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளன. மேலும் இலங்கை மற்றும் ஜாம்பியா போன்ற நாடுகள் கடன் பொறிகளில் சிக்கிக் கொண்டு தவிக்கின்றன. அந்நாடுகள் கடன் கடமைகளை எதிர்கொள்ள முடியாத நிலையில் உள்ளன.

சீனாவின் பெல்ட் அண்டு ரோடு திட்டம் பல்வேறு எதிர்மறை விமர்சனங்களைப் பெற்றுள்ளது. முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட வியூகங்களைச் செயல்படுத்துவதில் பெரும் சிக்கல்கள் நிலவுகின்றன. சீனாவை மையமாகக் கொண்ட சங்கிலித் தொடரை உருவாக்கும் நோக்கில் பல்வேறு பகுதிகளை அதிவேகமாக இணைப்பது, உள்ளூர் தேவைகளில் போதிய கவனம் செலுத்தாதது, வெளிப்படைத்தன்மை இல்லாமை, இறையாண்மையைப் புறக்கணித்தல், பாதகமான சுற்றுச்சூழல் தாக்கம் போன்ற பல காரணங்களுக்காகவும் இத்



திட்டம் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது. ஊழல் மற்றும் சரியான நிதி மேற்பார்வை இல்லாமை என்று அப்சர்வர் ரிசர்ச் ஃபவுண்டேஷன் சிந்தனைக் குழுவின் சக ஊழியரான கிரிஷ் லுத்ரா சமீபத்திய கட்டுரையில் எழுதினார்.

சிக்கல்கள் இருந்தபோதிலும், சீனர்கள் ஒரு “பெரும் முன்னேற்றத்தை” அடைந்துள்ளனர் என்ற நிலையில், ஜி20 மாநாட்டில் அறிவிக்கப்பட்ட திட்டம் அதற்கு ‘போட்டியாக” கூட இன்னும் நெருங்கவில்லை என்று கன்னா கூறுகிறார். இது ஒரு மிதமான போக்குவரத்து வழித்தடமாக இருக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

‘இது சீனத் திட்டத்தின் அளவில் ஒரு பெரிய கேம் சேஞ்சர் கூட அல்ல. இது ஒரு நல்ல அறிவிப்பு. ஆனால் நீங்கள் இந்த திட்டத்தை முழுமையாகப் பார்த்துவிட்டு இது இல்லாமல் உலகம் வாழ முடியாது என்று கூறவில்லை,” என்று கன்னா கூறினார்.

### காரணம் என்ன?

கடந்த ஜூலை மாதம் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் முதலீட்டுடன், பெல்ட் அண்டு ரோடு திட்டத்தை பத்தாண்டுகளாக சீனா நிறைவேற்றி வருகிறது. 150 க்கும் மேற்பட்ட நாடுகள் இதில் பங்குதாரர்களாக இணைந்துள்ளன. லூத்ரா எழுதுவது போல், அதன் புவியியல் நோக்கத்தை ‘ஒரு பிராந்தியத்திலிருந்து உலகளாவிய முன்முயற்சிக்கு” பெரும் அளவில் விரிவுபடுத்தியுள்ளது.

சீனாவின் வளர்ந்து வரும் முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்தும் மற்றொரு உள் கட்டமைப்பைப் பயன்படுத்த வளர்ந்த மேற்கு நாடுகள் மேற்கொள்ளும் முதல் முயற்சியாக இந்திய-ஐரோப்பிய பொதுப் போக்குவரத்துத் திட்டம் இருக்கவில்லை.

ஜி7 மற்றும் அமெரிக்கா ஆகியவை இணைந்து 2022 ஆம் ஆண்டில் உலகளாவிய உள் கட்டமைப்பு மற்றும் முதலீட்டிற்கான ஒரு கூட்டமைப்பைத் தொடங்கின. 2027 ஆம் ஆண்டளவில் உலகளாவிய உள் கட்டமைப்பு திட்டங்களில் 600 பில்லியன் அமெரிக்க டாலர்களைத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டது அந்தக் கூட்டமைப்பு. இத்திட்டம் தான் உலகளாவியது என சீனாவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் இந்த முயற்சியைக் காட்டியது.

ஆனால், அந்த கூட்டமைப்பின் அளவும், லட்சியமும் பொருந்திப் போகவில்லை. இருப்பினும், கடந்த ஐந்து ஆண்டுகளில் சீனாவின் முயற்சி வளர்ந்துள்ள



விதம் பெல்ட் அண்டு ரோடு திட்டம் “உலகளாவிய பொருளாதாரத்தை வளமாக்கும்” என்பதற்கு சான்றாக அமைந்துள்ளது என்று கன்னா கூறுகிறார்.

சில ஆய்வாளர்கள், பெல்ட் அண்ட் ரோடு திட்டத்துக்கு (பிஆர்ஐ) தெரிவிக்கும் எதிர்ப்பின் மூலம் இந்திய - ஐரோப்பிய போக்குவரத்துத் திட்டத்தை பிரத்யேகமாகப் பார்ப்பதற்கு எதிராக எச்சரிக்கின்றனர். இதுபோன்ற முன்னோக்கு பார்வை பலனளிக்காது என்றும் அவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

அதன் உருவாக்கம் பரிவர்த்தனை கூட்டாண்மைகளின் தற்போதைய போக்குக்கு மேலும் ஊக்கத்தை அளிக்கிறது. அங்கு நாடுகள் ஒரே நேரத்தில் பல கூட்டாளர்களுடன் ஒத்துழைப்பில் ஈடுபடுகின்றன. கோபன்ஹேகன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான ரவீந்தர் கவுர் கூறுகையில், “இன்றைய நாட்களில் பெரும்பாலான நாடுகள் பல மன்றங்களிலும் கூட்டணிகளிலும் பங்கேற்கின்றன,” என்றார்.

இந்திய-ஐரோப்பிய போக்குவரத்துத் திட்டத்தின் புரிந்துணர்வு ஆவணம் பல விவரங்களில் மென்மையானதாக உள்ளது. ஆனால் அடுத்த 60 நாட்களில் செயல் திட்டம் தீட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றுவரை, அத்திட்டம் ஒரு கோட்பாட்டு அளவிலேயே தொடர்கிறது.

அத்திட்டத்தைச் செயல்படுத்துவது மிகவும் சிக்கலானதாக இருக்கும். ‘முதலீடுகள், ஒவ்வொரு அரசும் ஒதுக்கும் மூலதனம் மற்றும் காலக்கெடுவைக் குறிப்பிடும் முக்கிய அரசு நிறுவனங்கள் எவை என்பதையும் நாம் பார்க்க வேண்டும்,” என்கிறார் கன்னா.

ஆவணத் தயாரிப்பை ஒத்திசைக்க ஒரு புதிய பழக்க வழக்கம் மற்றும் வர்த்தக கட்டிடக்கலை அமைக்கப்பட வேண்டும். “யுரேசியாவின் குறுக்கே அமைக்கப்படும் அந்த போக்குவரத்து தடையற்றது. பயணத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் மட்டுமே உங்களுக்கு அனுமதிகள் தேவை. ஆனால், இந்திய-ஐரோப்பிய போக்குவரத்துத் திட்டத்தில் இது இல்லை.”

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் சௌதி அரேபியா போன்ற நட்பு நாடுகளுக்கு இடையேயான உறவுகளைக் கையாள்வதில் வெளிப்படையான புவிசார் அரசியல் சிக்கல்களும் உள்ளன. அவற்றை பெரும்பாலும் கண்ணால் பார்க்க முடியாது. இந்த வகையான ஒத்துழைப்பை மோசமாக்குவதற்கு இது தேவையில்லை என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.



மும்பை மற்றும் ஐரோப்பாவிற்கு இடையே சரக்குகளை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படும் எகிப்தின் கடல் மட்ட நீர்வழியான சூயஸ் கால்வாயுடன் இந்தத் திட்டம் போட்டியிடும் வகையில் இருக்கும். “இந்திய-ஐரோப்பிய பொதுப் போக்குவரத்துத் திட்டம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சௌதி அரேபியாவுடனான நமது உறவுகளை மேம்படுத்தும் அளவுக்கு, அது எகிப்துடனான உறவைப் பாதிக்கும்” என்று பொருளாதார நிபுணர் சுவாமிநாதன் ஐயர் டைம்ஸ் ஆஃப் இந்தியாவில் எழுதிய தனது கட்டுரையில் கூறியுள்ளார்.

சூயஸ் கால்வாய் வழியாக கடல்வழி போக்குவரத்து மலிவானது என்பது மட்டுமல்லாமல் அது வேகமானதும் கூட. அதே நேரம் இதில் சிக்கல்களும் குறைவாக உள்ளன. ‘இது சிறந்த அரசியல் அர்த்தமுள்ளதாக இருக்கலாம். ஆனால் இது போக்குவரத்து பொருளாதாரத்தின் அனைத்து கோட்பாடுகளுக்கும் எதிரானது,” என்று ஐயர் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த போக்குவரத்துத் திட்டத்தின் லட்சியங்கள் வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்தின் குறுகலான நோக்கத்தை தாண்டி, மின்சார கட்டுமானங்கள் முதல் இணைய பாதுகாப்பு வரை அனைத்தையும் உள்ளடக்கியது. குவாட் போன்ற பாதுகாப்பு மன்றங்களில் நடந்த உரையாடல்களின் அடிப்படையில், ஐக்கிய அரபு அமீரகத்துக்கான முன்னாள் இந்திய தூதர் நவ்தீப் பூரி இதை தி நேஷனல் நியூஸ் இதழில் எழுதிய போது சுட்டிக்காட்டினார்.

“புது டில்லியில் உருவாக்கப்பட்ட இந்த உயர்ந்த லட்சியங்கள் நனவாகும் பட்சத்தில், அவை பாதுகாப்பான, பூமிக்கு பாதிப்பு ஏற்படுத்தாத ஒரு தனியான பங்களிப்பை அளிக்கும். இப்போதைக்கு, அந்த நம்பிக்கையுடன் வாழ்வோம்.”

●

# ஒன்லைன் பாதுகாப்புச் சட்டம்: எதேச்சாதிகாரத்துக்கான ஒரு ட்ரோஜன் குதிரை



சஞ்சன ஹத்தொட்டுவ

(நேற்றைய தொடர்ச்சி)

தற்போதைய வரைவு Bots மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட போலி நடத்தைகள் (coordinated inauthentic behaviours) என்பவற்றை கவனத்தில் எடுப்பதற்கான வழிமுறைகளை உத்தேசிக்கின்றது. அதன் மூலம் அது ஒரு கேலிக்கூத்து பிராந்தியத்துக்குள் பிரவேசிக்கின்றது. கலாநிதி பட்டத்துக்கான ஆராய்ச்சியை உள்ளடக்கிய விதத்தில் ஊஜை என்ற இந்த விடயத்தை நான் ஆய்வு செய்திருக்கின்றேன். ஆநவயவும் கூட ஜனவரி 6 கெப்பிட்டல் ஹில் கிளர்ச்சிகளின் பின்னரே அதன் உற்பத்திகள், அதன் தளங்கள் என்பன இணையத்துக்கு வெளியிலான வன்முறைக்கான கருவிகளாக பயன்படுத்தப்பட்டு வரும் விடயத்தை கவனத்தில் எடுத்திருந்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதாக இருந்தால், பின்னர் மேலைத்தேய நாடுகளில் பயன்படுத்தப்பட்ட, பெருமளவுக்கு அதி நவீன இயல்புகளைக் கொண்ட உத்திகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கை ஒரு சிறு துளியாக மட்டுமே இருந்து வருகின்றது. இந்தப் போக்குகளை இனங்கண்டு கொள்வதற்கு ஒரு தொழில்நுட்ப ரீதியான நிபுணத்துவம் அவசியமாகும். அது மிகத் தீவிரமான விதத்தில் நாடு, மொழி, உள்ளடக்கம் மற்றும் திட்டவட்டமான பின்புலம் என்பவற்றிலும், அதேபோல, குறிப்பிட்ட சமூக ஊடகத் தளம் என்பவற்றிலேயே தங்கியுள்ளது. பேஸ்புக் பங்கங்களிலிருக்கும் சிஐபி இன்ஸ்டர்கிராமிலிருக்கும் விஐபி யிலும் பார்க்க வேறுபட்டதாகும். Meta விலிருக்கும் சிஐபி டுவிட்டரிலிருக்கும் சிஐபி யிலும் பார்க்க வேறுபட்டதாகும். இலங்கையில் இந்தத் தளங்கள் அல்லது விடயப் பரப்பு தொடர்பான நிபுணத்துவம் எனக்குத் தெரிந்த வரையில் இருந்து வரவில்லை. அந்த நிபுணத்துவ அறிவு இல்லாத காரணமாக, இந்த அம்சம் குறித்த வரைவுச் சட்டத்தின் பிரிவு மிகவும் மோசமான விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் பொருத்தமற்ற விதத்தில் செயற்படுத்தப்பட்டால் அல்லது மிகவும் தளர்ச்சியான விதத்தில் அதற்கு வரைவிலக்கணம் வழங்கப்பட்டால் அதன் விளைவாக தவிர்க்க முடியாத விதத்தில் பெருந்தொகையான பாவனையாளர்கள் தாம் செய்யாத குற்றத்துக்காக தண்டனை அனுபவிக்க முடியும் என்பதனை அவதானிக்க முடிகிறது, அல்லது அதிலும் பார்க்க மோசமாக அரசு அனுசரணையுடன் கூடிய விதத்தில் ஏனைய செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளில் அஜாக்கிரதையான விதத்தில் ஒரு பாகமாக இருந்து வர முடியும்.

இதுவும் கூட அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. நாமல் ராஜபக்ஷ இலங்கையில் முதன் முதலில் ஃபேஸ்புக் ளைப் பயன்படுத்தியவர் ஆவார். நானும் இணை ஆய்வாளராக இருந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆராய்ச்சி 2018 ஆம் ஆண்டில் பின்வரும் விதத்தில் குறிப்பிட்டிருந்தது: "இலங்கையைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட ஒரு அரசியல் சித்தாந்தம், கருத்து, நபர், கட்சி அல்லது செயன்முறை என்பவற்றை மேம்படுத்துவதற்காக சமூக ஊடகங்களை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தும் விடயத்தில் அரசாங்கத்தின் கைகள் பெருமளவுக்கு ஓங்கியிருக்கவில்லை. குறிப்பாக, தேர்தல் திணைக்களம் அல்லது வேறு ஏதேனும் சுயாதீனமான தேர்தல் வன்முறை கண்காணிப்பு அமைப்புக்கள் அத்தகைய விடயங்களை கண்காணித்து கவனத்தில் எடுப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆற்றலை அபிவிருத்தி செய்து கொள்வது ஒருபுறமிருக்க, அந்த விடயங்களைக் கற்பனை செய்து கூட பார்த்திருக்கவில்லை." 2018 கலவரங்களின் போதும், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னரும், 2019 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும், அறகலய காலப் பிரிவின் போதும் சிஐசி தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அறகலய காலப் பிரிவின் போது அந்த இயக்கத்தின் செய்திகளையும், ஒருமித்த இயல்பையும், வரலாற்று முக்கியத்துவத்தையும் உதாசீனம் செய்வதற்கென மேற்கொள்ளப்பட்ட சிஐபி முயற்சிகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டின் முதல் பாதி காலப்பகுதியில் பேஸ்புக்கைப் பயன்படுத்தி ஒருங்கிணைக்கப்பட்ட பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், அவை முன்னெப்பொழுதும் இருந்திராத அளவிலான உற்பத்தி விகிதங்களைக் கொண்டிருந்தன. இந்தப் பிரச்சாரம் தொடர்ச்சியாக கவனத்திலெடுத்த விடயம் ஜனாதிபதியை மேம்படுத்துவதும், நாடாளுமன்றம் மற்றும் தேர்தல்கள் என்பவற்றின் வகிபங்கினை உதாசீனம் செய்வதுமாகும். பேஸ்புக்கில் மீண்டும் மீண்டும் இடம்பெற்ற பதிவுகள் நாடாளுமன்றத் தேர்தல்களை இல்லாமல் செய்வதற்கு பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் விதத்திலான ஒரு பிரசாரத்தை முன்னெடுப்பதற்கு முயற்சித்தன. அப்போது பதவியிலிருந்த ஜனாதிபதியின் தலைமையின் கீழ் ஒரு இராணுவ ஆட்சியை நடத்துவது (நாட்டை இராணுவமயப்படுத்துவது) போதுமானது என்ற கருத்தை அவை முன்வைத்தன. இந்தப் பிரச்சாரத்தின் வேகம் மற்றும் வலிமை என்பன மிகவும் உயர் மட்டங்களில் காணப்பட்டன.

2014 தொடக்கம் சிஐபி தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏதோ ஒரு விதத்தில் ராஜபக்ஷர்கள் அல்லது சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியினர் சமூக ஊடகத் தளங்களில் முன்னணியில் இருந்து வரும் விடயம் எடுத்துக் காட்டப்பட்டது. சமூக ஊடகங்களில் செல்வாக்குடன் செயல்படுபவர்கள் அந்தக் குடும்பத்துக்கும், அவர்கள் சம்பந்தப்பட்ட சமூக ஊடக வலையமைப்புக்களுக்கும் சார்பானவர்களாக இருந்து வந்ததுடன், அவர்களுக்கான பதில்களாகவும் செயற்பட்டு வந்தார்கள். பாம்புக் குட்டிகள் தொடக்கம் பொது இடங்களில் சுவரோவியங்களை வரைவது வரை சமூக ஊடகங்களின் மீது உயர் அளவில் பக்கச்சார்பான ஒரு நிகழ்ச்சிநிரலை உருவாக்கும் சிஐபி இன் வலிமை தென்பட்டது. சிங்கள பௌத்த அரசொன்றின் கட்டமைப்பு ரீதியான இனவாதத்துக்கு ஆதரவளிக்கும் ஒரு சமூக போக்கு ஊடகங்களில் நன்கு ஸ்தாபிதமாகியிருந்தது. நியூசிலாந்தில் வேண்டுமென்றே பரப்பப்படும் பொய்த் தகவல்கள் தொடர்பாக நான் இப்பொழுது விரிவான ஆய்வை மேற்கொண்டு வருகிறேன். ஆனால், அந்த ஆய்வின் போது, பல வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு எடுத்துக் காட்டிய அதி நவீன சிஐபி மட்டத்துக்கு இணையான எத்தகைய ஒரு நிலைமையும் இதுவரையில் தெரிய வரவில்லை. உண்மையிலேயே இது எமது நாட்டில் உண்மைகள் சிதைக்கப்படும் நிலைமையும், தகவல் ஒழுங்கீனங்களும் எந்த அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளன என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. அறகலயவின் பின்னரும் எதேச்சாதிகாரப் போக்குக்கு ஆதரவளிக்கும் விதத்தில் வேண்டுமென்றே பொய்த் தகவல் பரப்பப்படும் நிலை தொடர்ச்சியாக நீடித்து வருகிறது. உத்தேச சட்டத்தின் பிரயோகம் இந்தப் பிரச்சார கட்டமைப்பை அர்த்தபூர்வமானதாகக் கவனத்திலெடுக்கும் என நம்புவது வெறுமனே கேலிக் கூத்தாகும்.

கண்காணிப்புப் பொறிமுறையொன்றின் மூலம் இவை அனைத்தும் மேலும் சிக்கலாக்கப்பட்டுள்ளன. இலங்கையில் சுமார் பதினைந்து வருட காலமாக இந்தக் கண்காணிப்புப் பொறி விஸ்தரிக்கப்பட்டு வந்திருக்கும் விதம் குறித்து நான் மிகக் கவனமாக ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறேன். சமூக ஊடக கண்காணிப்பு செயற்பாடுகளில் சீனா சம்பந்தப்பட்டுள்ளது எனக் குற்றம் சாட்டும் விதத்திலான முதலாவது ஊடக அறிக்கைகள் 2010 ஆம் ஆண்டிலேயே வெளிவந்திருந்தன. 2018 ஆம் ஆண்டில் ஆநலையஉ"ைழ என்ற ஒரு சீன டிஜிட்டல் ஆய்வுக் கம்பனி 60 இராணுவ மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கென கொழும்பில் ஒரு செயலமர்வை நடத்தியிருந்தது. ஏற்கனவே இக்கம்பனியின் தொழில்நுட்பம் ருலபாரசுன மக்களை இலக்கு வைத்து பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக அவுஸ்திரேலிய உபாய ரீதியான கொள்கை நிறுவனம் பின்வரும் குறிப்பை முன்வைத்துள்ளது: "இந்தச் செயலமர்வு டிஜிட்டல் நுண்ணாய்வுகள் மற்றும் Meiya Pico கம்பனியின் "Smart Forensic Solution" என்ற செயற்பாடு என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. இந்தச் செயலமர்வில் பங்கேற்றவர்கள் இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, CERT மற்றும் அவசரகால எதிர்வினைத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரையும் உள்ளடக்கியிருந்தனர்". ஏன்? அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டது ஏன்? அந்தச் சந்தர்ப்பத்தில் இது நடத்தப்பட்டது ஏன்? இதனுடன் தொப்புள்கொடி உறவு கொண்டிருக்கும் விடயம் இலங்கையில் சீனாவின் உரிய விதத்தில் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்படாத செல்வாக்கு செயற்பாடுகள், (IO) ஆகும். சீனா சமூக ஊடகங்களில் உத்தியோகபூர்வமான மற்றும் அதே நேரத்தில் போலியான கணக்குகளை ஒரு சேரப் பயன்படுத்துவதுடன், அது 'Wolf Worrior Diplomacy' என்ற இராஜதந்திர செயற்பாட்டுடன் பிணைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் சீனா சமூக ஊடகங்களை தந்திரமாகக் கையாண்டு வந்திருக்கும் விதம் பரவலான உபாய ரீதியான இயல்பைக் கொண்டதாகும். வேறு எந்தவொரு முன்னணி வெளிநாட்டு வல்லரசை விடவும் அதன் தொழில்நுட்பம் அதிநவீன இயல்பைக் கொண்டதாக இருந்து வந்தது. ஆனால், இந்த வரைவுச் சட்டம் இவை எதனையும் கவனத்திலெடுக்கவில்லை.

இந்த வரைவுச் சட்டம் அதன் உள்ளடக்கத்திலும், வடிவத்திலும் எந்த அளவுக்கு சிங்கப்பூரின் POFMA சட்டத்தின் ஒரு நேரடிப் பிரதியாக இருந்து வருகின்றது என்ற விடயம் குறித்த எந்தவொரு குறிப்பையும் நான் அவதானிக்கவில்லை. சிங்கப்பூரின் அந்தச் சட்டம் குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் பின்வரும் அவதானிப்பை முன்வைத்துள்ளது: "இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கும் தகவல் 'பொய்யானது' எனப் பிரகடனம் செய்வதற்கு தனியொரு அமைச்சருக்கு அது அனுமதியை வழங்குகிறது. பொதுமக்களின் நலன் கருதி அவசியமானது எனக் கருதப்படுமிடத்து அந்த உள்ளடக்கத்தை 'திருத்துவதற்கு' அல்லது 'நீக்குவதற்கான' கட்டளையையும் அவர் வழங்க முடியும்."

இலங்கையின் வரைவுச் சட்டம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "முப்பத்திரண்டாம் பிரிவின் கீழ், செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்று எத்தேதியன்று பயனுள்ளதாக வருகின்றதோ அத்தேதியன்று தொடங்கும் விதித்துரைக்கப்பட்ட காலப் பகுதியொன்றின் பின்னர், வெளிப்படுத்தப்பட்ட ஒன்லைன் அமைவிடமொன்றின் மீது டிஜிட்டல் விளம்பரப்படுத்தல் இடையீட்டாளர் ஒருவர் உள்ளடக்குகின்ற அல்லது உள்ளடக்குவதனைச் செய்திருக்கின்ற ஏதேனும் கட்டணம் செலுத்தப்பட்ட உள்ளீடு, வெளிப்படுத்தப்பட்ட ஒன்லைன் அமைவிடத்தின் மீது இலங்கையில் அறிவிக்கப்படுவதில்லை என உறுதிப்படுத்துவதற்கு (இலங்கையின் உள்ளும், இலங்கைக்கு வெளியேயும்) அவர் நியாயமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்." சிங்கப்பூரின் POFMA சட்டம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "ஒரு விதித்துரைக்கப்பட்ட டிஜிட்டல் விளம்பரத்தில் இடையீட்டாளர் ஒருவர் அல்லது விதித்துரைக்கப்பட்ட இணைய இடையீட்டாளர், அவர் ஓர் டிஜிட்டல் விளம்பரப்படுத்தல் இடையீட்டாளராக அல்லது ஓர் இணைய இடையீட்டாளராக செயற்படும் பொழுது, அச்செயற்பாடு பாகம் 3 பணிப்புரையின் அல்லது பாகம் 4 பணிப்புரையின் விடயமாக இருந்து வரும் தலைப்பின் கூற்றை அல்லது அம்சங்களை உள்ளடக்கும் ஒரு ஒன்லைன் அமைவிடத்துக்கு விளம்பரம் வழங்குவதாக அல்லது மேம்படுத்துவதாக இருக்கும் ஏதேனும் கட்டணம் செலுத்தப்பட்ட உள்ளீடு சிங்கப்பூரில் தொடர்பாடல் மேற்கொள்ளப்படுவதற்கு வசதி செய்து கொடுப்பதில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு (சிங்கப்பூருக்கு உள்ளேயும் வெளியேயும்) அவர் நியாயமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்."

சிங்கப்பூரின் சட்டத்தை இலங்கைக்குள் வெறுமனே இறக்குமதி செய்வதற்கான ஒரு மெல்லிய திரையினால் மூடப்பட்ட ஒரு முயற்சியாக இது இருந்து வருகின்றது என்பது தெளிவாகும். இதற்கான ஒரேயொரு உதாரணம் இது மட்டுமல்ல. இரு நாடுகளுக்குமிடையில் பெருமளவுக்கு வேறுபட்ட அளவுகளிலிருந்து வரும் அரசியல், தொழில்நுட்ப, பூகோள உபாய ரீதியான, சமூக, வரலாற்று, குடிசனவியல் மற்றும் ஜனநாயகக் காரணிகள் இங்கு கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. சிங்கப்பூரில் பிரச்சினைக்குரியதாக இருந்து வரும் ஒரு விடயம் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக அழிவுகரமான தாக்கங்களை எடுத்து வர முடியும்.

அங்கத (நையாண்டி) எழுத்தாளர்கள் மற்றும் புலனாய்வுப் பத்திரியாளர்கள் ஆகியோரை இலக்கு வைக்கும் பொருட்டு இந்த வரைவுச் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும் (நிச்சயமாக அது பயன்படுத்தப்படும் என நான் வாதிடுகின்றேன்) என்பது குறித்து பலர் ஏற்கனவே கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த உத்தேச சட்டவாக்கம் ஏனைய எண்ணற்ற பல கரிசனைகளையும் தோற்றுவித்துள்ளது. முக்கியமாக நிறைவேற்று ஜனாதிபதியினால் இப்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் ஜனநாயகத்தைப் பின்னோக்கித் தள்ளுவதற்கான முயற்சிகளுக்கு இது மேலும் பக்கபலமாக இருந்து வருகின்றது. அத்துடன், எங்கும் பரவலாகக் காணப்படும் கண்காணிப்பு உள்கட்டமைப்பு வசதிகளிலிருந்தும் இது பயனடைகின்றது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதானது சிவில் சமூகம் ஏற்கனவே எதிர்கொண்டு வரும் ஆபத்துக்களை மேலும் தீவிரப்படுத்த முடியும். மேலும், அது முன்னெப்பொழுதும் இருந்திராத செயல்பரப்பிலும், அளவிலும் எதிர்கருத்துக்களை ஒடுக்குவதற்கான அரசு அனுமதியுடனான சட்டங்களுக்கூடாக சட்ட சட்டங்களுக்கு பல கருவிகளை அது வழங்க முடியும். இந்தச் சட்ட வரைவின் விளைவாக, ஒன்லைன் தீங்குகள் குறித்த உரையாடலின் ஓர் அடிப்படையாக இந்த வரைவிலிருந்து எத்தகைய பயனுள்ள விடயங்கள் கிடைக்கும் என என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. இலங்கையின் ஜனநாயக உள்ளார்ந்த ஆற்றலை சாதித்துக் கொள்வதில் அதற்கு எந்த இடமும் இருந்து வரவில்லை. எனவே, அது உறுதியாக நிராகரிக்கப்படுதல் வேண்டும். ●

# வடக்கு கல்வி அமைச்சில் மோசடி ஆளுநர் செயலகமும் உடந்தை!

## இலங்கை ஆசிரியர் சங்கம் சாடல்

கொழும்பு, ஒக். 07

வடக்கு மாகாண கல்வி அமைச்சில் ஊழல் மோசடிகள் புரையோடி போயுள்ள நிலையில் வட மாகாண ஆளுநர் செயலகம் அதற்கு துணைபோவதாக குற்றஞ்சாட்டியுள்ள இலங்கை ஆசிரியர் சங்கம் கொக்குவில் இந்து கல்லூரி அதிபர் விடயத்தில் முறைமைகளுக்கு உட்பட்டு விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் இலங்கை ஆசியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண கல்வி அமைச்சிலே வடமாகாண கல்வித்துறை சார்ந்து நீண்டகாலமாக ஊழல் மோசடிகள் புரையோடி காணப்படுகின்றது. இது தொடர்பாக நாங்கள் அவ்வப்போது குரல் கொடுத்து வருகின்ற போதிலும் கல்விப்புலம் சார்ந்த அதிகாரிகளால் இந்த முறைகேட்டுவாதிகள் காப்பாற்றப்படுகின்ற நிலையே தொடர்ச்சியாக காணப்பட்டு வந்துகொண்டிருக்கு.

இதற்கு சிறந்த உதாரணமாக அண்மைக்காலமாக நடைபெற்று வருகின்ற கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபரினுடைய விடயத்தை நாங்கள் குறிப்பிட வேண்டும். ஆரம்பத்திலே கொக்குவில் இந்துக் கல்லூரியினுடைய அதிபர் தொடர்பான நிதிக்கையாளுகை மற்றும் பாடசாலை நிர்வாக முறைகேடுகள் தொடர்பாக பல தரப்பாலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு விசாரணைகைள் கோரப்பட்ட நிலையிலேயே வடமாகாண கல்வி அமைச்சு நீண்டகாலமாக இந்த முறைகேடுகளை மூடி மறைத்து ஊழல்வாதிகளை காப்பாற்றும் விதமாகத்தான் செயற்பட்டு வந்து கொண்டிருகிறது.

கொக்குவில் இந்துக் கல்லூரியினுடைய தற்போதைய அதிபர், வட மாகாண சபையின் ஆட்சிக் காலத்திலே கல்வி அமைச்சராக இருந்த சர்வேஸ்வரன் அவர்களுடைய உறவினர் என்பதற்காக நியமனம் செய்யப்பட்டவர். இந்தநிலையிலேயே பல நிர்வாக முறைகேடுகளை செய்த நிலையில் பல தரப்பாலும் குற்றச்சாட்டப்பட்ட நிலையிலேயே இறுதியாக தற்போது ஆளுநருடைய செயலாளராக இருக்கின்ற நந்தகோபாலன் மூலமாக விசாரணை முன்னெடுக்கப்பட்டது. அந்த விசாரணையில் கூட அவருடைய முறைகேடுகள் அனைத்தும் மூடி மறைக்கப்பட்டது.

இதே நந்தகோபாலன் தலைமையில் தான் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியினடைய அதிபர் தொடர்பாக இலங்கை ஆசியர் சங்கம் முன்வைத்த 11இற்கு மேற்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வேண்டும் என ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. அவர் அங்கே சென்று எந்தவிதமான அடிப்படையான விசாரணைகளையும் மேற்கொள்ளாமல் குறித்த அதிபரை பாதுகாக்கின்ற விதமாகத்தான் செயல்பட்டிருந்தார்.

அதன் பின்னர் வந்து இதற்குரிய ஆதாரங்களை தந்தால் தாங்கள் விசாரணைகளை மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என கடிதம் மூலம் கேட்டிருந்தார். அதனடிப்படையில் நாங்கள் அனைத்துக்கும் ஆதாரங்களை பதிவுத் தபால் மூலமாக நந்தகோபாலன் வட மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக உதவி பணிப்பாளராக இருந்தபோது அனுப்பியிருந்தோம்.

இருந்தும் நாங்கள் அனுப்பிய ஆவணங்களை பரிசீலிக்காமலேயே அந்த ஆவணங்கள் கிடைப்பதற்கு முன்பாகவே விசாரணை அறிக்கையை முழுமைப்படுத்தி கல்வி அமைச்சிற்கு வழங்கியிருந்தார். ஆகவே தற்பொழுது ஆளுநருடைய செயலாளராக இருக்கின்ற நந்தகோபாலன் முறைகேட்டாளர்களுக்கு துணையாக எப்படியெல்லாம் துணை போயிருக்கக்கூடிய ஒருவர் என்பது வட மாகாண கல்விப்புலம் சார்ந்தவர்களும் வட மாகாண மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த செயலாளரை வைத்துக் கொண்டுதான் வட மாகாண ஆளுநர் செயலகம் இயங்கிக்கொண்டு இருக்கின்றது என்ற மிக வேதனையான செய்திகளையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

ஆளுநருடைய செயலாளர் நந்தகோபாலனால் விசாரிக்கப்பட்டு மூடி மறைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களால் அவர் பக்கச்சார்பாக செயல்படுகின்றார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையிலேயே கல்விப்புலம் சாராத ஒரு கணக்காளரை கொண்டு அந்த விசாரணைகள் நடைபெற்றதனால் தான் கொக்குவில் இந்துக் கல்லூரியினுடைய முறைகேடுகள் வெளிவந்தது.

எனவே அந்த முறைகேடுகள் வெளிவந்ததை மூடி மறைக்க முடியாமல் குறித்த பாடசாலையினுடைய அதிபரை வலயத்தில் இணைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயே கல்வி அமைச்சின் செயலாளரால் கடிதம் அனுப்பப்பட்டிக்கின்ற நிலையிலும் இன்று வரை கொக்குவில் இந்துக் கல்லூரியினுடைய அதிபர் வலயத்தில் இணைக்கப்படவில்லை என்பது அதிகாரிகளின் முறைகேடுக்கு துணைபோகின்ற தன்மைகளைத்தான் அப்பட்டமாக வெளிச்சம்போட்டு காட்டுகின்றது என்ற குற்றச்சாட்டை இலங்கை ஆசியர் சங்கம் முன்வைக்க விரும்புகிறது.

ஏற்கனவே ஆளுநருடைய செயலாளராக இருந்த ஒருவர் கல்வி அமைச்சில் இடம்பெற்ற முறைகேடுகளுக்கு துணையாக இருந்து இன்று முறைகேடுகளினுடைய உச்சத்தில் இருக்கின்ற நிலையில் அவர் வடமாகாணத்திற்கு வெளியால் அனுப்பப்பட்டும் கூட வடமாகாணத்தில் உள்ள ஊழல்வாதிகளை முறைகேட்டாளர்களை பாதுகாக்கின்ற விதமாகத்தான் அவர் தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

அவருடைய அந்த செல்வாக்கின் அடிப்படையிலேயே சில விடயங்கள் ஆளுநர் செயலகத்தாலும் வடமாகாண கல்வி அமைச்சாலும் ஏனைய அதிகாரிகளாலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரு துன்பகரமான நிகழ்வு இன்றும் நடந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறான தலையீடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு கொக்குவில் இந்துக் கல்லூரியினுடைய அதிபர் உடனடியாக வலயத்திலே இணைக்கப்பட்டு அவருக்கு பதவி உயர்வு என்ற போர்வையில் கோட்டக்கல்வி அதிகாரி பதவியையும் அல்லது பேவறு ஒரு உயர்ந்த பதவி நிலையினை வழங்கி பாதுகாக்கின்ற செயற்பாடுகளை வடமாகாண கல்வி அமைச்சும் ஆளுநர் செயலகமும் நிறுத்தி உடனடியாக ஒரு மோசடிக்காரரை எந்த விதத்தில் அணுக வேண்டுமோ எந்த விதத்தில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமோ அந்த விடயங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்பதனை இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகின்றது.

(ஐ)





